RECEIVED
2 - 11 - 1986
PERIODICALS DIVISION

விலை ரூபா 1—25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 15 ஸபர் 27 இதழ் 264

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 1-11-1986

★ தமிழீழ செயலகம்

## சிங்கள அரசுக்குச்செலுத்தும் வரிக்கு விலக்களிக்கும்

யாழ்ப்பாணம். சனி. ''1986/87 வரி வரிமதிப்பீட்டாண்டிலிருந்து சகல வருமான வரி அறவீடுகளையும் சிவில் நிர்வாகங்களையும் பொறுப்பேற்றுள்ள ''தமிழீழச் செயலகம்'' அறவிடும். வருமான வரிக்குரிய வருமானத்தை மதிப்பீடு செய்து அதற்குரிய வருமான வரியை கணித்து அதில்வரும் மொத்த வரியிலிருந்து உலக நாடுகளில் காணப்படும் இரட்டை வரிமதிப்பு விடுப்பு கொள்கைக்கமைய சிங்கள அரசுக்கு செலுத்தப்படும் வருமான வரிக்கு விலக்களிக்கப்படும். இது சம்பந்தமாக மேலதிக விபரங்களை ''தமிழீழச் செயலகம்'' விரைவில் தமிழீழ மக்களுக்கு அறியத்தரும்''

இவ்வாறு 'தமிழீழ விடுதலைப் புலிகள், நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(9-ம் பக்கம் பார்க்க)

## கோட்டை இராணுவமுகாமை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கவும்

### கூட்டணியிடம் யாழ். வைத்தியசாலை ஊழியர் கோரிக்கை

சென்னை ஒக்டோபர் 31 யாழ் அரசாங்க வைத்திய சாலைமீது தொடர்ச்சியாக கோட்டை முகாமிலிருந்து மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதலை நிறுத்துவதற்கும் முகாமை அங்கிருந்து அகற்றுவதற்கும்உரிய நடவடிக்கைகளை மேற்கொளளுமாறு யாழ் வைத்தியசாலை ஊழியர்கள் சென்னையிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு டெலக்ஸ் செய்தியொன்றை அனுப்பியுள்ளனர்.

அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

இவ்வருடம் ஒகடோபர் 2-ல் நாலாவது தடவையாக 'ஷெல்' தாக்குதல் கோட்டை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாக்குதலால் நோயாளரைப் பரிசோதனை செய்யும் கட்டடமொன்று சேதமாக்கப்பட்டுள்ளது.

(9 ம்பக்கம் பார்க்க)

# முறிகண்டியில்ஹெலியிலிருந்து குண்டுத் தாக்குதல்

### வீடு, கடைகள், வாகனங்கள் எரிந்து சாம்பராகின

(அலுவலக நிருபர்)

**முறிகண்டிப் பிள்ளையார் கோவில் பகுதியில் ஹெலிகொப்டரிலிருந்து குண்டுவீசப்பட்டதையடுத்து பிள்ளையார் கோவில் ஐயரின் வீடு. கார், கோவிலுக்கு முன்னாலுள்ள கடைகள் மோட்டார் சைக்கிள்கள் அனைத்தும் எரிந்து சாம்பரானது**

நேற்றுப்பிற்பகல் இப்பயங்கர சம்பவம் இடம்பெற்றது.

அநுராதபுரத்திலிருந்து யாழ்பபாணம் நோக்கிப்புறப்பட்ட இராணுவத்தினர், நேற்று பிற்பகல் கிளிநொச்சி இராணுவ முகாம் வந்து சேர்ந்துள்ளனர். இதற்கிடையில் நேற்று முன்தினம் இரவு கொழும்பிலிநந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த சில தனியார் பஸ்கள், லொறிகள் ஆயுதவற்றின் துணையுடன் வந்த இராணுவத்தினர், கிளிநொச்சி இராணுவமுகாமை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாங்குளத்தை தாண்டி வந்துகொண்டிருந்த தனியார் வாகனங்கள் நேற்று கொக்காவில் முகாமுக்கு முன்னால் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டன. பினனர் அனைத்து வாகனங்களும் முகாமுக்குள் கொண்டு செல்லப்பட்டன.

அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்து தனியார் பஸ்பிரயாணிகளுக்கு சகலவசதிகளும் அளிக்கப்பட்டதாகத் பிரயாணிகள் தெரிவிக்கின்றனர்

கிளிநொச்சி நோக்கிச்சென்று கொண்டிருக்கும் இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கு

(01ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டுக்குப் பெண் பலி

யாழ்ப்பாணம், சனி

யாழ் கோட்டைஇராணுவ முகாமுக்கு அண்மையில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடந்த பெண்ணின்

(10ம் பக்கம் பார்க்க)

**தீபாவளி வாழ்த்து**

வாசகர்கள், விளம்பரதாரர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்.

நிர்வாகி, ஈழநாடு.

## யாழ். பெரியாஸ்பத்திரி சகல கிளினிக்குகளும் திங்கள் முதல் நிறுத்தம்

யாழ்ப்பாணம் சனி

யாழ் பெரியாஸ்பத்திரியில் மேற்கொள்ளப்படும் சகல கிளினிக்குகளையும் எதிர்வரும் திங்கள்முதல் நிறுத்துவதென ஆஸ்பத்திரி செயற்குழு முடிவு செய்துள்ளது.

யாழ் பெரியாஸ்பத்திரி மீதும் பொதுமக்கள் மீதும் கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஏவப்படும் ஷெல்களினால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை அடுத்தே மேற்படி முடிவை எடுத்துள்ளதாக இச்குழு தெரிவித்தது

இது சம்பந்தமாக ஆஸ்பத்திரிச் செயற்குழு மேலும் தெரிவித்துள்ளதாவது

பொதுமக்களின் அத்தியாவசிய சேவையை முன்னிட்டு ஆஸ்பத்திரி வெளிநோயாளர்

(9ம் பக்கம் பார்க்க)

## புதிய க. பொ. த. சா/த பரீட்சை

யாழ்ம்பாணம், சனி

க. பொ த. சாதாரணப் பரீட்சை 198?ம் ஆண்டு முதல் முன்னேடியான மாற்றங்களுடன் அறிமுகப் படுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

(10ம் பக்கம் பார்க்க)

## பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடம் மீண்டும் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், சனி

பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடம் மீண்டும் காலவரையறையின்றி மூடப்பட்டதுடன் அங்கு எதிர்வரும் 7ம் திகதி ஆரம்பமாகவிருந்த பொறியியல் பீட சகல பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற அசம்பாவிதத்தை தொடர்ந்து மூடப்பட்ட பொறியியல் பீடம் மீண்டும் சென்ற 28ம்

[10ம பக்கம் பார்க்க]

**இப்பொழுது பயணம் பின்னர் கட்டணம்**

உங்களது சகல விமானப்பயணத் தேவைகளுக்கும், எல்லா விமானப்போக்கு வரத்துக்களுடன் இணைப்புக்கொண்ட.

**ஹோம் பினன்ஸ்**

நிறுவனத்துடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள்!

★ எம்மிடம் நிரந்தர வைப்புப்பணம் உள்ளவர்களுக்கு உடனடியாகவும் மற்றவர்களுக்கு வசதிக்கேற்ற தகுந்த உத்தரவாதமிருப்பின் 18 அல்லது 24 மாதத் தவணைகளில் உங்கள் பிரயாணத்தொகையை செலுத்தக்கூடிய வகையில் கடன் உதவியை இப்பொழுது நாம் வழங்குகிறோம்.

விபரங்களுக்கு:

**HOME FINANCE LTD.**

கிளை முகாமையாளர்

82, கன்ணுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது தலைமைக்காரியாலயம்

463, காலி வீதி, கொழும்பு - 3.

(C 2808)

## தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் புதிய போக்குடைய போராட்ட சக்தியாய் இனங்காட்டவேண்டும்

### —ஈரோஸ்

யாழ்ப்பாணம், சனி

'தமிழீழ மககள் விடுதலைக் கழமானது தனது உறுதியற்ற அரசியல் நிலைப்பாடுகளையும் பொருத்தமற்ற இராணுவத் திட்டங்களையும் களைவதுடன் [illegible] படுகொலைகளையும் [illegible] செய்து மக்கள் முன் வெளிப்படுத்தி புதிய போக்கை கடைப்பிடித்து போராட்ட சக்தியால் அடையாளம் காட்ட வேண்டும்' அத்துடன் ஈழப் பிரதேசத்தின் பெரும் [illegible] யை எதிரிகள் சூழ்ந்துள்ள நெருக்கடியான இச் சூழ்நிலையில் அனைத்து விடுதலை அமைப்புகளும் ஸ்ரீலங்கா அரசின் இராணுவத் திட்டங்களை முறியடிக்கும் வகையில்

[9ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாண வீதியில் மானிப்பாய் சந்தைக்கு அருகாமையில் 2½ பரப்புக் காணி சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு செ. கங்காதரன் 41, கே. கே. எஸ். றோட் கொக்குவில். (C 5464)

Candy பெரிய குளிர்சாதனப்பெட்டி, கடைப்பாவனைக்குரிய தேநீர் தயாரிக்கும் Stainless Steel English Boiler, Kenwood Chef மற்றும் பல. உடன் விற்பனைக்கு: 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். C 5504

பலவிதமான பாவித்த வீட்டுத்தளபாடங்கள், முதிரை, பலா, தேக்கு அலுமாரிகள், கட்டில்கள், குளிர்சாதனப் பெட்டி, கசற்றேடியோக்கள், Dinner Set, Pyrex Tea Set, கிளாஸ், சில்வர் வகைகள், Formica சாப்பாட்டு மேசைகள், Vacuum Cleaners, Floor Polisher எலற்றிக் அயன் Fan, Kenwood Chef, Electric Water Boiler, Show cases T V Stand கண்ணாடி மேசைகள் Meat safe மற்றும்பல உடன் விற்பனைக்கு M. தியாகராஜன், 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம், (C 5503)

கால்நடைகளுக்கு உகந்த விஷேச ''மினரல் மிக்சர் கல்சியப் பவுடர்'' மொத்த மாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M G. M. 781, K K S. Road, and 208, 1 st Cross St, Jaffna. T.P. 22611 (C-5073)

வோக்ஸ் வகன் கார் EN 1000 தொடர் இலக்கம் நல்ல நிலைமையில் உள்ளது. விற்பனைக்குண்டு. தொடர்பு: தம்பு, நாவலர் வளவு, வாசிகசாலை ஒழுங்கை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். C-5525

## தவறிவிட்டது

எனது மத்திய கிழக்கு கடவுச் சீட்டு புத்தகம் இல: H 0410878 உடையது சென்ற வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் பஸ் ஸ்ராண்டிற்கும் வின்சர் சந்திக்கும் இடையில், கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். மு. கிருஷ்ணன் யோகநாதன் லோட்டன் வீதி, மானிப்பாய் தெற்கு. (C-3035)

28 - 10 - 86 அன்று இரவு யாழ். வேம்படி வீதியில் ''ஒஸ்போர்ட் கார் வீல்கப்'' தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு ஒப்படைத்து தகுந்த சன்மானம் பெறலாம். நியூட்டன்ரேட் சென்ரர், 31, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-5528)

செல்லர் சர்வானந்தராஜன் நவாலி வடக்கு மானிப்பாய் என்பவருடைய அடையாள அட்டையுடன் சில பொருட்கள் அடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C 5513)

## வகுப்புகள்

க. பொ. த. (உயர்) 87ம் ஆண்டு மாணவருக்கு வினாவிடை முறையில் அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்பு விஞ்ஞான பாடங்கள் மட்டும் 7-11-1986 ஆரம்பமாகிறது. Science centre Kraveddy (C 5474)

## வகுப்புகள்

G.C.E O/L Dec. 86 மாதிரி ஆங்கில வினாத்தாள் மீட்டல் வகுப்புகள். இலவச வினாப்பத்திரங்களுடன் ஆரம்பம். கிழமை நாட்களிலும், வார இறுதியிலும் 2-11-86/ 3-11-86 விபரங்கட்கு தொடர்பு: S B. IYAR, 12 வைமன் வீதி, நல்லூர். (C5347)

## தேவை

அரசாங்க ஸ்தாபனத்தில் கடமையாற்றும் ஓர் இளம் குடும்பத்தினருக்கு மாநகர சபை எல்லைக்குள் அல்லது 7மைல் சுற்றளவிற்குள் நல்ல நிலையிலுள்ள வீடு ஒன்று விலைக்கு வாங்குவதற்குத் தேவை. முதற் கடிதத்திலேயே எல்லா விபரங்களையும் தெரிவிக்கவும் தொடர்பு கொள்க:- விளம்பர இல C-5505, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C-5505)

குடும்பப் பொறுப்பில்லாத 25-40 வயதுடைய வீட்டுப் பணிப் பெண் உடன் தேவை. இந்திய வம்சாவளியினர் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். S. குமாரசூரியர், உபதபாற் கந்தோருக்கு கிட்ட, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (C 5516)

## சேவை

கைரேகை, எண்சோதிடம் கிரகநிலை விபரமாகப்பார்த்து உண்மைநிலை சொல்லப்படும். இத்துடன் மணமகள், மணமகன் தேவையானவர்களும் உடன்தொடர்புகொள்ளலாம் செவ்வாய் குற்றமுள்ள சாதகர்களுக்கு முதலிடம் உண்டு. செ நாகேந்திரராசா, 174/16. கோவில்வீதி. (கைலாசபிள்ளையார் கோவிலடி) யாழ்நகர். (C-5499)

1-11-86 முதல்

யாழ் நகரில் புதிய உதயம்

உங்கள் மனக்கவலைகளை விட்டொழியுங்கள்,

நாடுங்கள்

**உளவள சாந்தி ஆலோசனை நிலையம்**

19/3. கொழும்புத்துறை வீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை),
யாழ்ப்பாணம்.

உங்கள் குடும்பப்பிரச்சினைகள் மற்றும் உங்கள் பிரச்சினைகளுக்கு இங்கு ஆலோசனை வழங்கப்படும். உங்கள் பிரச்னை அந்தரங்கமாக வைக்கப்படும்
வெளிநாட்டில் பயிற்சி பெற்ற நிபுணர்கள் ஆலோசனை வழங்குகின்றார்கள்.

தினசரி: காலை 8-30 மணிமுதல் மாலை 5-30 மணிவரை

ஆலோசகர் குழு:

DR. K. SUKUMAR, (M. B. B S) (Cey.)
ASST. LECTURER,
MEDICAL FACULTY
Fr. S. DAMACIN. O M I, M. A. (Hons),
OTTAWA.

நாடுங்கள்

உளவள சாந்தி ஆலோசனை நிலையம்

வட இலங்கையில் ஒரே ஒரு ஆலோசனை நிலையம்
எத்தனை கோடி பணமிருந்தாலும் நிம்மதிவேண்டும் வீட்டிலே.........
நிம்மதி பெற ஒரே ஒரு இடம்

**உளவள சாந்தி ஆலோசனை நிலையம்**

19/3, கொழும்புத்துறை வீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை,)
யாழ்ப்பாணம்.

விளம்பர வடிவமைப்பு:- ஜோ. எட்டன்,
செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ், யாழ்நகர்.

[A 3038]

## மணப்பந்தல்

அரசாங்க உத்தியோகத்தரான முற்போக்கான எண்ணங் கொண்ட 39 வயது இளைஞர், அமைதியும் அழகும் நிறைந்த 29 - 35க்கு இடைப்பட்ட வயதினைக் கொண்ட படித்த பெண்ணைத் தனது வாழ்க்கைத் துணையாக்குவதற்கு விரும்புகிறார் சீதனம், மதம், சாதி பொருட்படுத்தப் படமாட்டாது. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல C 5510 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 5510)

### MATRIMONIAL

Wanted a fair attractive girl below 28 years old with I C M A fully qualified or Doctor willing to qualify further from a respectable Hindu Vellala family (Vegetarian preferable) for a 31years smart B Sc Engineer in London (Permanent Citizen) Mars in the 12th place. Reply with birth chart. Apply Advt No C-5487, C/o Eelanadu Jaffna. (C-5487)

## சோதிடம்

Astrologer and palmist தீபாவளித் திருநாள் வாழ்த்துக்கள் தங்கள் சாதகங்களைக் கைரேகையுடன் ஆராய்ந்து, திருமணம், காதல் வரன் பற்றிய எல்லா விபரங்களும் அறியவும், பிறநாட்டுச் சாதகங்கள், திருமணப்பொருத்தங்கள் பார்க்கவும்' பிறநாட்டுப் பிரயாணம் பயன்பாடு, வீட்டு நிலையம், கல்வி, தொழில்வாய்ப்பு மற்றும் தேவைகளுக்கும் பிரச்னைகளுக்கும் தீர்க்கமான ஆலோசனை பெற அழைக்கின்றேம் இராசேந்திரன் ''திருவுளம்'' அச்சுக்கூட ஒழுங்கை, ஸ்ரேசன் றோட், கொக்குவில். [C-5524]

My grateful thanks to
Holy Mother Mary

St. Jude,
St. Anthony,

Sacred heart, and
Infant
Jesus for Great
Favours Granted.

Publication as Promised.

A HINDU.

[C-5507]

**A/L 87**

தூய பிரயோக கணிதம்
துரிதமீட்டல் பகல்நேர
வகுப்பு

ஆரம்பம்: 5-11-86

7-45: காவிகள்
9-00: அட்சரகணிதம்
(கணக்குகள் மாத்திரம்)

ஆசிரியர்:

ரவிமோகன்

யாழ்ப்பாணம்.

வெலிங்டன் சந்திக்கும்
பெருமாள் கோவிலுக்கும்
இடையில்)

[C-5514]

## இடமாற்றம்

பருத்தித்துறை, வெளி யாழ் அபிவிருத்திச் சபை அச்சுவேலி உப அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. எஸ் குமரபதி யாழ் அபிவிருத்திச்சபை புலோலிஉப அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்று பொறுப்பேற்கிறுள்ளார். (எ)

ஆங்கில மொழியில் தேர்ச்சிபெறுவதற்கு அந்தமொழியின் ஆரம்ப இலக்கண அறிவு மிகமிக அவசியம்

அந்த ஆரம்ப இலக்கணத்தை தமிழ்மொழி மூலம் மிகத்தெளிவாகச் சொல்லித் தருகிறது:

**LEARNER'S ENGLISH**

'லேணேர்ஸ் இங்கிலிஷ்'

இந்நூலின் ஒருபிரதியை வாங்கி உங்கள் ஆங்கில அறிவை விருத்தி செய்யுங்கள்

G C. E (O/L) வகுப்பு மாணவர்கள் பரீட்சையில் நல்ல சித்திபெற இந்நூல் உதவும்.

இது ஒரு 'வரதர் வெளியீடு'

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

விலை ரூபா 16/-

[C-2832]

## 180ம் நாள் நினைவஞ்சலி



இளையதம்பி
அம்பிகைபாகன்

(உரிமையாளர் - ரஜனி ரான்ஸ்போட்
தோற்றம்: 20-01-1950
மறைவு: 07-05-1986
திதி: 01-11-1986

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் உயரவைக்க அயராது உழைத்த எங்கள் அன்புத் தெய்வமே! எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுத்திடீரென அணைந்துவிட்ட எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே, நீங்கள் மறைந்தும் மறையாத ஒளியாய் எங்கள் உள்ளத்தில் தினமும்ஒளி வீசிக்கொண்டேயிருக்கும் இன்று தீபாவளித் திருநாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கும்

அன்பு மனைவி-பதிமா, பிள்ளைகள் ரஜனி, ராஜினி, தாய், சகோதரங்கள்.
சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.
[C 5497]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகச் செய்திகள்

# தென்கொரியாவில் பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸார் மோதல்!

ஸியோல், அக்-31

**தென்கொரியத் தலைநகரான ஸியோலில் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கலகம் அடக்கும் பொலிசாருக்குமிடையே நேற்றுப் பலத்த மோதல்கள் இடம்பெற்றன. இரு தரப்பினரும் இதில் பலத்த காயமடைந்தனர். சுமார் 800 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். நிலைமை தற்போது கட்டுப்பாட்டிலுள்ளதாக அறிவிக்கப்டுள்ளது.**

ஸியோவில் பல்கலைக்கழகக் கட்டிடங்களை மாணவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர் தொடர்ந்து அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களிலும், ஏனைய எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் அவர்கள் இறங்கியிருந்தனர்.

இதனையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த தென்கொரியப் பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம், வேகநீர்ப் பிரயோகம் ஆகியவற்றை மேற்கொண்டனர்.

மாணவர்கள் பதிலடியாக பெற்றோல் குண்டுகளையும், கற்களையும் பொலிசார்மீது வீசினர். இம்மோதலில் இரு தரப்பினரும் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இரு மணி நேரமாக இடம் பெற்ற இம்மோதலையடுத்து பொலிசார் மாணவர்களின் கட்டுப்பாட்டிலிருந்த கட்டிடங்களைச் சுற்றி வளைத்து அவற்றைத் தமது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவந்தனர். இந்நடவடிக்கையின்போது 800மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் அதிகாரி ஒருவர் இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில், கைதாகியுள்ள மாணவர்கள்மீது கம்யூனிஸ்ட் நடவடிக்கைகள் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றார்.

தென்கொரிய ஜனாதிபதி திரு. சுண்டு ஹுவானின் ஆட்சிக்கெதிராகவும், தென்கொரியாவில் அமெரிக்கப் படைகள் நிலைகொண்டுள்ளதை ஆட்சேபித்துமே தென்கொரிய மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

---


## இன்று! தீபாவளி வெளியீடு

எங்கள் போராட்டம் எங்களுக்கு விடிவைத் தரட்டும்!

எங்கள் தியாகம் எங்கள் சந்ததிக்கு விடிவைத் தரட்டும்!!

எங்களால் எங்களுக்கே இடப்பட்ட விலங்குகளை உடைத்தெறிய வருகின்றுள்

கொழும்புத்துறை அமலியினர் ஜோ எகட்டனின் அனுசரணையுடன் வழங்கும்.

# விடியலுக்கு இல்லை தூரம்

(சமூகப் புரட்சி நாடகம்)

காலம்: 01 - 11 - 86 சனிக்கிழமை

இடம்; சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

நேரம்: முதல்காட்சி 1-30 மணிக்கு

(மாணவ, மாணவிகளுக்கு மட்டும்)

மறுகாட்சி 5-00 மணிக்கு

## வேர்ஜின்ஸ் குழுவினரின்

இனிய இன்னிசை விருந்தும் இடம்பெறும்.

விளம்பர அமைப்பு: ஜோ. எகட்டன் செனித். அட்வடைசிங், அன்ட் மார்கட்டிங் சிஸ்டமஸ், யாழ் நகர்.

(A-3037)



# Bata

## SHOW ROOM

NEW MARKET, JAFFNA.

எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் உளங்கனிந்த

## தீபாவளி நல்வாழ்த்துக்களைத்

தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

— முகாமையாளரும் விற்பனைப் பிரதிநிதிகளும்

தற்பொழுது எம்மிடம் புதிய ரகங்களில்

# பாட்டா பாதணிகள்

விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன.

உங்கள் தேவைகளுக்கும் திருப்திக்கும் இன்றே விரையுங்கள்.

## மலிவுவிலையில் சில தினங்கள் மட்டுமே.

[C-3042]


---

சவூதி அரேபிய

## புதியஎண்ணெய் அமைச்சரின் ‘ஒபெக்’ கூட்டம்!

லண்டன், அக்-31

சவூதி அரேபியாவின் தற்காலிக எண்ணெய்த்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திட்டமிடல் அமைச்சர் நஸார் ‘ஒபெக்’ அமைச்சர்களின் அவசர கூட்டமொன்றைக் கூட்டியுள்ளார்.

‘ஒபெக்’ ஸ்தாபனத்தின் நிலைமையை ஆராய்வதுடன், புதிய எண்ணெய் விலையை நிர்ணயிப்பது குறித்து ஆராயவே இக்கூட்டம் கூட்டப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

புதிய விலை பீப்பா ஒன்றுக்கு 18 டாலர்களாக நிர்ணயிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை 20 ஆண்டுகளுக்கும் மேலாக சவூதி அரேபிய எண்ணெய்த்துறை அமைச்சராகவிருந்த ஷேக் யமானி அவ்வமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருப்பது ‘ஒபெக்’ ஸ்தாபனத்திற்கு எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று சவூதி அரேபியா தெரிவித்துள்ளது. அத்துடன் இத்தாபனம் தொடர்பான சவூதி அரேபியாவின் கொள்கையில் எதுவித மாற்றமுமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக சவூதி எண்ணெய்த்துறை அமைச்சர் நஸார், முன்னாள் அமைச்சர் யமானியின் உதவியாளராக 1962ம் ஆண்டு முதல் 68ம் ஆண்டுவரை கடமையாற்றியவர்.

இதனால் ‘ஒபெக்’, சவூதி எண்ணெய்த்துறை விவகாரங்களில் இவருக்கு மிகுந்த பரிச்சயம் உண்டென்று தெரிவிக்கப்பட்டது.

---

## பி. பி. ஸி. மீது தாட்சர் அரசு கண்டனம்!

லண்டன், அக்-31

பி பி ஸியின் செயற்பாடு தொடர்பாகப் பிரிட்டனின் ஆளும் கன்சர்வேட்டிவ் அரசு ஆட்சேபனை வெளியிட்டுள்ளது

கடந்த ஏப்ரலில் லிபியா மீதான அமெரிக்காவின் விமானத் தாக்குதலை பி பி ஸி. அதன் தொலைக்காட்சி சேவையில் விபரித்தவிதம் தொடர்பாகவே அக்கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

லிபியா மீது அனுதாபங்கொள்ளக்கூடிய வகையிலும், அமெரிக்கா மீது ஆத்திரமடையச்செய்யும் வகையிலும் அத்தொலைக்காட்சி நிகழ்ச்சியை பி.பி.ஸி. தயாரித்திருந்ததாக தாட்சர் அரசு தனது ஆட்சேபனையில் குறிப்பிட்டுள்ளது.

பி பி ஸி. நிகழ்ச்சித் தயாரிப்புக்குப் பொறுப்பான அதிகாரியொருவர் தாட்சர் அரசின் கண்டனத்தை மறுத்துள்ளார். பாரபட்சமற்ற முறையில் நீதியாகவே அந்நிகழ்ச்சி அமைந்திருந்ததாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த ஆண்டு பி.பி ஸி. செய்திச் சேவையில் பிரிட்டிஷ் அரசின் செல்வாக்கு அதிகரித்திருப்பதாகத் தெரிவித்து பி பி ஸி. ஊழியர்கள் 24 மணிநேர வேலைநிறுத்தமொன்றில் இறங்கியிருநததது குறிப்பிடத்தக்கது.

---


# திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் அக்ஷய வருடம் ஐப்பசி மாதம் 17-ம் நாள் (03-11-86) திங்கட்கிழமை இரவு 9 மணி 3 நிமிஷம் முதல் 10 மணி 30 நிமிடம் வரையுள்ள சுபவேளையில்

| எமது புத்திரன் திருநிறை செல்வன் **மனோகரன்** அவர்களுக்கும் | எமது புத்திரி திருநிறை செல்வி **புனிதவதி** அவர்களுக்கும் |
|---|---|

அம்பாள் திருவருளினால் மணமகளின் இல்லத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

| ச. நடராஜா (சின்னராசா) தம்பதிகள் | க. பொன்னுத்துரை தம்பதிகள் |
|---|---|
| 44/6, நீராவியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம். | தாவடி வடக்கு, கொக்குவில். |

(C-5413)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுமுறை அறிவித்தல்

இன்று தீபாவளி திருநாளை முன்னிட்டு "ஈழநாடு" காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் நாளை ஞாயிறுமட்டும் 'ஈழநாடு' வெளிவர மாட்டாது. [ஆ-ர்]

## மணிவாக்கு

வேதனை விளைவிக்கும் விடயங்கள்
நம்மை நல்வழிப்படுத்தும் நல்ல சிரியர்கள்
= பெஞ்சமின் பிருங்லின்

# நமதுநோக்கு

## அதர்மத்தை ஒழிப்பதில் அனைவர்க்கும் பங்கு

உலக அரங்கில் ஒரு நாட்டின் பெருமையை உயர்த்திக்கொள்ள ஒவ்வொருவரால், ஆணோ பெண்ணோ முடியும்.

தீபாவளி சுபதினத்தன்று நாம் இவ்வாறு கூறுவதில் என்ன பொருத்தம்?

தீபாவளி சுபதினமானாலும் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு சிலகாலமாக அது துக்கதினம் என்பது வெளிப்படை.

இந்தியப் பிரதமர் உலகப் பெரும் தலைவர் இந்திராவின் நம்பிக்கை கொண்ட தமிழ்மக்கள் துப்பாக்கிக்குப் பலியான அவ் வீராங்கனையை இன்று தெய்வமெனக் கொள்கின்றனர். அவருடைய திடீர் மறைவு கடந்த இரண்டு வருடங்களாக இலங்கைத் தமிழருக்கு தீராத துயராகவே இருக்கிறது

இலங்கை அரசை எதிர்த்துப் போராடும் இளைஞர்கள், பயங்கரவாதிகள் அல்ல போராளிகளே என்பது அன்னையின் திடமான கொள்கை; தனயன் அதிலிருந்து நழுவவில்லை. ஆயினும் இனப்பிரச்சினை வேறு, தமிழர் பயங்கரவாதம் வேறு என்ற வஞ்சனைக் கருத்தை மக்கள் மத்தியில் பரப்பி நாட்டைக் கெடுத்து வரும் தலைவர்களை தாமதமின்றித் தக்க பரிகாரம் காண்பதில் தயங்குகின்றனர்.

எத்தனைபேர் - அப்பாவி மக்கள், ஆமான மனிதர். மாணவர் செல்வங்கள் டலியாகிக்கொண்டிருக்கின்றனர். இந்தப் பட்டியலில் இன்று இடம்பெறும் யாழ் மத்திய கல்லூரி மாணவ முதல்வன் விபுலானந்தனின் மரணம் நாட்டுக்கே பேரிழப்பு என்ற சோக வெள்ளம் உடனடியாகத் தடுக்கப்படல் வேண்டும்

150 வருட விழுமிய வரலாறு கொண்ட யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணத்தினரின் இலங்கைத் தமிழரின் கலாசாரத்தை திருத்தியமைத்த ஆறுமுக நாவலர் பெருமானின் அபிமான பாடசாலை அதில் படித்ததும், படிப்பித்ததும் கிறீஸ்தவர்களுக்கு பிபிலிய நூலை மொழிபெயர்த்ததும் அக்கல்லூரி ஒரு தேசிய கல்லூரியாகக் கணிக்கப்படுமளவிற்கு உதவினர்.

எத்தகைய பெரியோரை உருவாக்கிய இக்கலைக் கோயில், யாழ். கோட்டை ராணுவத்தின் தாக்குதலுக்குப் பலியாகி வருகிறது

இதனை நன்றாக உணர்ந்தும் இத்தகைய துன்பியல் நாடகத்தைத் தவிர்க்கும் நடவடிக்கைகளில் நாம் தோல்விகண்டோம். அதன் விளைவு?

நாம் தொடக்கத்தில் கூறியதுபோல் கூறிய கருத்து அன்னை இந்திராவின் தூரப்பார்வைக்கு உதாரணமாக அமைகிறது.

உலக அரங்கில் இன்று தமது விளையாட்டு வீரத்தால் இந்தியாவைத் தன்னந்தனியாக உயர்த்தியிருக்கும் உஷாவை இரண்டு வருடத்திற்குமுன் கேட்ட கேள்வி, "உங்கள் வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியான தருணம் எது?"

அதற்கு இன்று அகில உலகையே கவர்ந்திருக்கும் இக் கேரளப் பெண்மணி கொடுத்த விடை; "ஒலிம்பிக்கில் மயிரிழையில் பரிசு கைநழுவி விட்டபோது, மறைந்த பிரதமர் இந்திரா காந்தி 'ஒவ்வொருவரும் வெற்றிக்குத்தான் பாடுபடுகிறார்கள். ஆனால் உனது 'ஸின்சியரான' முயற்சிக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்' என்ற செய்தி கிடைத்த தருணம்தான் என் வாழ்க்கையில் மறக்க முடியாத சந்தர்ப்பம்". தர்மத்தின் உயிர்நிலையம் இது.

தீர்க்கதரிசனம் இருந்தவாறு! இன்று முடிவடைந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் சாதனைகள் இந்த ஒரு பெண்ணாலே என்றால், அதுவும் ஒரு சாதாரண கேரளக் குடும்பத்துப் பெண் என்றால். குமரிமுதல் இமயம்வரைக்கும் இந்தியா ஒரு நாடு, ஒரு பண்பாடு என்பதை உலகம் உணர்ந்து வியக்கிறது.

அண்டைநாட்டில் வாழும் நாம் இந்தச் சிறு நாட்டில் இனக் குரோதத்தை வளர்த்து என்றும் முடிவுகாணாத ஆயுதப்போரில் இளம் வீரர்களைத் தினந்தோறும் இழக்கின்றோம். பரம்பரை பரம்பரையாகக் கல்வியூட்டும் பழம்பெரும் கலைக்கோயிலையும், நோயினால் துன்புறும் மாநிலத்துக்கு உயிரளிக்கும் மருத்துவ கோயிலையும் பாதுகாக்கமுடியாது தவிக்கின்றோம்.

தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் என்றுமே போர் நடந்து கொண்டிருக்கிறது. தர்மம் குறிப்பிட்ட ஒரு சாராரின் பிரத்தியேக வைப்பு என்று நினைப்பது தவறு. அதர்மம் நீங்க அனைவரும் பங்குகொள்ளவேண்டும்.

இன்று யாழ்ப்பாணத்திலும், ஏனைய தமிழ்ப் பகுதிகளிலும் புரண்டோடும் துக்கசாகரம் தக்க பிராயசித்தத்தைக் கொண்டே நிறுத்தப்பட வேண்டும். அதற்குரிய தர்மமே எம்மைப் பாதுகாக்கவல்லது. வருகிற இரு வாரங்களில் பாதுகாப்பு அமைச்சர் எதிர்பார்க்கும் அற்புதம் எவ்வாறு நிறைவேறும்?

இன்றைய கொடுமைகள் ஒழிய, சமுதாயத்தைக் கலக்கிவரும் அழிவு நீங்க, கொடுங்கோன்மை அகல அன்னை இந்திரா சொன்னது போல் 'ஸின்சியராக' இத்தினத்தில் ஆண்டவனை வேண்டுவோமாக.

## ஸ்கந்தசஷ்டி

தேவர்களது நாட்டை அழித்தும் தேவர்களைச் சிறைப்படுத்தியும் கொடுமைபுரிந்த சூரபன்மனுடன் முருகப்பெருமான் யுத்தம் செய்த தினங்களே ஐப்பசிமாத வளர்பிறைச் சஷ்டிததி இறுதியான ஆறு நாட்களாகும்

தேவர்கள் சிவநிந்தை மயமாயிருந்த தக்ஷயாகத்தில் பங்கு கொண்ட பாவத்திற்கு உரிய பயனை அனுபவிக்கும் வகையிலேயே சூரபன்மன் ஆட்சி செய்தான் என்பர். தேவர்கள் சூரன் ஆட்சியில் துன்புற்றபோது சிவபிரானையும் முருகப்பெருமானையும் வழிபட்ட சிறப்பால் எண்ணில்லாத யுகங்கள் நரகத்தில் உழன்றுலும் அனுபவித்து முடியாத பயங்கரமான சிவநிந்தைப் பாபம் நீங்க முருகப்பெருமான் சூரசங்காரம் செய்தருளி தேவர்களுக்கு சொந்த நாட்டில் வாழ்வதான சுதந்திரமான வாழ்வு கிடைக்கச் செய்தருளினர்.

தேவர்களுக்கு சுதந்திர வாழ்வு கிடைக்கத்தக்கவகையில் சூரசங்காரம் செய்த முருகப்பெருமான் அச்சூரபன்மனுக்கும் தன்னுடன் இருக்கும் சாமீப்பிய முத்தியருளினர்

தேவர்களுக்கு மட்டுமன்றி சூரபன்மனுக்கும் முருகப்பெருமான் நல்லருள் புரிந்த நாட்களே ஸ்கந்தசஷ்டிவிரத காலமாக உள்ளது இவ்விரதகாலத்தில் விரத நியமத்துடன் இருந்து முருகப்பெருமானை வணங்குபவர்கள் முருகப்பெருமானின் அருளால் எல்லா நலன்களையும் எய்துவர். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் புத்திர பாக்கியம் இல்லாதவர்கள் கந்தசஷ்டிவிரதநாள் ஆறும் உபவாசமிருந்து முருகனை வணங்கி அருள்பெற்றுச் சற்புத்திரப் பேற்றை அடைகின்றனர்.

முருகப்பெருமானைக் குறித்து கந்தசஷ்டிவிரதம் கார்த்திகை விரதம் என்பன அனுஷ்டிப்போர் முருகன் கோவிலில் மாவிளக்கேற்றி வழிபடுவதும் ஒரு முறையாகும் வள்ளி நாயகி தினைப்புனத்தில் கொடுத்த இயற்கையோடொத்த தூயஉணவாகிய தினைமாவை தேனும் சருக்கரையும் கலந்து விளக்காகச் செய்து நெய்யிட்டு தீபமேற்றும்போது உண்டாகும் நறுமணம் முருகனின் வெளிப்பாட்டையும் மகிழ்ச்சியையும் உணர்த்துவதாயிருக்கும்

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் முருகன் வெளிப்பாட்டைக் கூறும்போது 'மணங்கமழ்தெய்வத்து இளநலம்காட்டி' என்று குறிப்பிடுவார் முருகப்பெருமான் வெளிப்பட்டுக் காட்சி கொடுக்கும்போது இளமைத் தோற்றமும் தெய்வீகவாசமும் நன்றாயிருக்கும் என்பது நக்கீரரின் அனுபவமாகும்.

முருகப்பெருமானின் வெளிப்பாட்டை ஞாபகப்படுத்துவதாய் முருகப்பெருமான் சிவபெருமானின் நெற்றிக்கண்ணினின்றும் வெளிப்பட்ட அக்கினிப் பொறியின் தோற்றத்தைக் காட்டுவதாய் உள்ள மாவிளக்கு வழிபாடு, திருப்புகழ் திருமுருகாற்றுப்படை கந்தசஷ்டிகவசம் என்பனவற்றை பராயணம் செய்தல் என்பன ஒருவருடைய ஆறுநாள் உபவாசத்துடன் சேரும்போது அரிய தவச்சாதனையாகக் கந்தசஷ்டிவிரதம் அமைந்துவிடுகின்றது.

ஆறுநாளும் திடசித்தத்துடன் உபவாசம் இருப்பதால் ஒருவனின் உடலில் உள்ள பல நோய்க்கிருமிகள் நாசமடைவதும் பல மாற்றங்கள் உடலுள் உறுப்புக்களில் ஏற்படுவதும் பல அறிஞர்களால் அவதானிக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் உள்ளத்தையும் உடலையும் மேன்மைப்படுத்தும் அரிய சாதனைக்காலமாகக் கந்தசஷ்டி விரதம் அமைவதை அறிந்து கடைப்பிடித்து நன்மை அடைவது அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏற்ற பண்பாகும்.

தி. பொன்னம்பலவாணர்

## நீர்வேலிக் கந்தசுவாமி தேவஸ்தானம்

### நாளை ஞாயிறு கந்தசஷ்டி 1-ம் நாள் கொடியேற்று விழா

கொடியேற்று விழா இன்று குவலயத்தார் வந்தணைந்தார்
கடியேறு கடப்பந்தார் அணிந்தருளும் வேலவனே
வடியேறு வேல்தாங்கி வகைத்தனை நீ சூரனையே
அடியேங்கள் துயர்நீர்க்க அவ்வேலை விடவலையோ?

பண்டிதர் நீ சி மு

## வடமராட்சி கல்வித்திணைக்கள
# உப அலுவலகம் குறித்து தீர்மானம்!

நெல்லியடி, வெள்ளி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபரின் விடுதியை வடமராட்சிப் பகுதிக் கல்வித்திணைக்கள உபகாரியாலயமாக மாற்றுவது பற்றிய விடயம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வடமராட்சி பிரஜைகள் குழுக்களின் ஒன்றியக் கூட்டம் தலைவர் திரு. ஜே ஜீ இராசேந்திரம் தலைமையில் இடம் பெற்றது

கல்வித்திணைக்கள உபகாரியாலயமாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபரின் உத்தியோக இல்லம் மாற்றப்படுவது வரவேற்கப்படக்கூடிய தொன்று எனவும் இதனால் வடமராட்சிப்பகுதி ஆசிரியர்கள் பல சிரமங்கள் செலவுகளின் மத்தியில் தங்கள் உயிர்களைக்கூடப் பணயம் வைத்து யாழ்ப்பாணம் கல்விக் கந்தோருக்குச் செல்லும் நிலைமை தவிர்க்கப்படலாமென்றும், தீர்மானிக்கப்பட்டது.

## மெய்கண்டதேவர்

தமிழ்மக்களின் தத்துவச் சிறப்புக்கு நல்ல சின்னமாக விளங்குவது சைவசித்தாந்தமாகும். பிறமொழிகளில் திருக்குறளைப் படித்து அதனால் தமிழை மதிப்பதுபோல் சைவசித்தாந்தக் கொள்கைமூலமும் தமிழ்ச் சமூகத்தின் மதிப்பு அறிஞர் மத்தியில் சிறப்புற்றுள்ளது. இந்தச் சைவசித்தாந்தத்திற்கு உரிய முதல் நூலான சிவஞான போதத்தை அருளிய சிறப்புக்கு உரியவர் மெய்கண்ட தேவராவர்.

மெய்கண்ட தேவருக்கு முன்னும் சித்தாந்த நூல்கள் சில இருந்திருக்கின்றன சைவத் திருமுறைகளில் பரவலாக சித்தாந்த உண்மைகள் மிளிர்ந்துள்ளன. திருமந்திரத்திலும் சித்தாந்தம் விளக்கப்பட்டுள்ளது. இப்படியான தத்துவங்களையெல்லாம் சிவஞானபோதம் உயர்ந்த நடையில்-தெளிந்த அமைப்பில் உபதேசக்கிரமத்தில் தருகின்றது.

திருஞானசம்பந்தர் தேவாரக் குறிப்பின்படி அச்சுதகளப்பாளருக்கு பிள்ளையாய் அவதரித்த மெய்கண்டார் நந்திதேவரின் மாணாக்கரிடம் நேரடியாக உபதேசம் பெற்று விநாயகப்பெருமானின் அருட்டுணை கொண்டே சிவஞானபோதத்தை அருளிச்செய்தார் என்பது வரலாறாகும்.

மெய்கண்டதேவர் அருளிய சிவஞானபோதத்திலுள்ள அத்துவித விளக்கம் மிக அருமையானது என்பது தாயுமானவரின் கருத்தாகும். தாயுமானவர் அத்துவித மெய கண்டார் என்றே இவரை வணங்குவார்.

ஐப்பசி மாதத்து சுவாதி நட்சத்திரமே மெய்கண்டதேவர் குருபூசைத் தினமாகையால் அத்தினத்தில் (நாளை) மெய்கண்டதேவரைச் சிந்தித்து வணங்குவதும் சிவஞானபோத பாராயணம் செய்வதும் நம் கடன். (ப)

## தீபாவளி கதம்ப நிகழ்ச்சி

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் நடாத்தும் 'கதம்ப நிகழ்ச்சி தீபாவளி தினத்தன்றும் மறுநாளும் நடைபெறவுள்ளன.

தீபாவளி தினத்தன்று பிற்பகல் புலோலி மெதடிஸ்த மிஷன் (மந்திகை) பாடசாலை மண்டபத்திலும் மறு நாள் பிற்பகல் நெல்லியடி மகாவித்தியாலய இராஜலிங்க மண்டபத்திலும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறுமென நோயாளர் நலன்புரிச் சங்கத் தலைவர் டாக்டர்: கே. சுகுமார் தெரிவித்துள்ளார்,

## கோப்பாயில் நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், சனி

வெளிக்களப்பரீட்சைக்காக மட்டக்களப்பில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகம்கொடுக்க வேண்டியிருந்த ஆசிரியர்களின் பிரச்னை சம்பந்தமாக தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த மகாசிவம் கல்வி அமைச்சின் ஆசிரியர்கலாசாலைப் பிரிவுப்பணிப்பாளருடன் கலந்துரையாடியுள்ளார்.

மேற்படி கலந்துரையாடலின்பின் மட்டக்களப்பில் நடைபெறவிருந்த வெளிக்களப்பயிற்சிக்கான நேர்முகப் பரீட்சையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரைவில் நடத்துவதற்கு பணிப்பாளர் உறுதியளித்துள்ளார் என்றும் நேர்முகப்பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப் படும்என்று திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

(வா)

## தராசு படிக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், சனி

வேலணை உதவியரசாங்க அதிபர் பணிமனையில் எதிர்வரும் 3ம் திகதி முதல் 7ம் திகதிவரை தராசு படிகளுக்கு முத்திரையிடும் வேலை நடைபெறவுள்ளதால் இப்பகுதியிலுள்ள சகல வியாபாரிகளும் தவறாது குறிப்பிட்ட தினத்திற்குள் முத்திரையிட்டுக் கொள்ளுமாறு உதவி உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் வேண் கோன் விடுத்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒளிவிளக்கு

இன்று தீபாவளிப் பண்டிகை. தீபவரிசையைக் குறிக்கும் இப்பண்டிகை பற்றிய புராணக்கதைகள் பல எம்மதியில் உலவுகின்றன. கதைகளில் வரும் பாத்திரங்களைப் பற்றியோ, அவர்கள் செய்த அற்புதங்கள்பற்றியோ ஆர்வமேலீட்டால் திருப்பித் திருப்பிக் கூறியும், கூறக்கேட்டும் களிப்படையும் நாம், எதற்காக அக்கதைகளிடையே பொதிந்திருக்கும் உண்மைத் தத்துவத்தை எண்ணிப் பார்க்க மறுக்கின்றேமோ தெரியவில்லை. கதைகளுக்கும் சடங்குகளுக்கும் தேவைக்கதிகமான முக்கியத்துவங் கொடுக்கின்றேமேயன்றி அவற்றால் உணர்த்தப்படும் உண்மை விளக்கங்களை ஏனே சிந்தித்துத்தெளிவு பெறத்தயங்குகிறேம் இது மனிதகுலத்தின் சாபக்கேடோ வென்று சிந்திக்கத் தூண்டுகின்றது.

தீபாவளி என்றல் ஊன உடலைச் சுத்தஞ் செய்து புத்தாடை அணிந்து புற அழகை வனப்படுத்திக்கொண்டு கோயில் தலங்களுக்கு சென்று வணங்கித் தித்திப்பான தின்பண்டங்களை வயிருர உண்டு களித்திருப்பதே என்ற நிலைப்பாட்டைச் சற்று மறந்து எம்மைப்பற்றியும் எமது அகத்தின் செயற்பாடுகள் பற்றியுஞ் சிறிதே இந்நாளில் எண்ணிப் பார்த்து அகத்தெளிபு பெறுவோம்.

விளக்கைஅணைத்தால்இருளை வா வா வென்று அழைக்கவும் வேண்டுமா? விளக்கணைந்ததென்று இருட்டுக்கு எப்படித்தான் தெரிந்துவிடுகின்றதோ தெரியவில்லை. உடனேயே வந்து அப்பிக் கொள்கின்றது. எவரும் அழைக்காமலே எவரது அழைப்பிற்கும் காத்திராமலே தானுகவே வந்துசூழ்ந்து விடுகிறது இருளானது விளக்கொளியில் சற்று மறைந்து ஒதுங்கியிருக்கிறது. தன்னுற்றல் குன்றியிருக்கிறது விளக்கின் ஒளி குன்ற இருளானது வலுப்பெற்று விடுகிறது. இருளும ஒளியும் இவ்வாருக எப்பொழுதும் ஒரே ஓயாத போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கின்றன என்றுகூறினுல் மிகையாகாது ஒன்றை ஒன்று மிஞ்சுவதற்கு இரண்டும் முயன்றுகொண்டேயிருக்கின்றன தமிழ்மறையில் ''விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல்'' என்ற வரி ஈண்டு நோக்கத்தக்கது. விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பின் பயனுல் இன்று நாம் மின்சார விளக்கின் ஒளியிலே மகிழ்ச்சியுடன் வீற்றிருந்து கொண்டு எமது வேலைகளை மிகச் சுலபமாகச் செய்துகொண்டிருக்கின்றேம். அம் மின்னெளி அணையும்போது, எங்கும் இருள் கவ்விக்கொள்ளும் எங்கும் இருள் கவிந்தவுடன் எமக்கோர் அச்சம் உண்டாகிறது. எமது அமைதி குலைகிறது. அதுவரை தேடுவாரற்று எங்கோ மூலையில் ஒதுக்கி வைக்கப்பட்ட மண்ணெய் விளக்கோ மிகவும் அத்தியாவசியமாகி விடுகின்றது அந்த மண்ணெய் விளக்கு எங்குள்ளது என்று சிறிது நொடிப் பொழுது எரிந்து முடியும் நெருப்புக்குச்சி ஒளியில் தேடுகின்றேம்.

மின்னெளி மீண்டும் தாமதியாது வந்து விடாதாவென எங்களது கண்களை உருட்டி உருட்டி விழித்துக் குருட்டுப்பார்வை பார்க்கின்றேம். கண்களிலிருந்தும் காணமுடியாது தவிக்கின்றேம். இருள் வந்ததும் கள்வன் வருவானே, யாராவது எதிரிகள் தருணம் பார்த்து எங்களைத் தாக்கிவிடுவார்களோ என்றுஅஞ்சி ஓடிப் போய் வீட்டுக்கதவுகளையும் மூடிவிடுகின்றேம்.

இந்தநிலையில் எம்மைச் சூழ்ந்திருக்கும் வெறுமை நிறைந்த அச்சத்திலிருந்து தற்காலிகமாக விடுபட இருளில் இருக்கும் யாம் அனைவரும் அவசர அவசரமாக ஒரிடத்திற் கூடி, உரத்த குரலிற் பேசி எம்மைத் தைரியப்படுத்திக் கொள்கின்றேம் தவறு செய்யக்கூடிய முனைப்புடையோருக்கு இருளானது சாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கின்றது.

இருள் எமதுகண்களைக் கெடுத்து மதியை மயக்கித் துக்கத்தைக் கக்கிப், பழிபாவச் செயல்களைச் செய்யத் தூண்டுகிறது மன அமைதியைத் தகர்த்து எறிகிறது.

நாம் ஒளியிலே பிறக்கின்றேம். இருளில் இருக்கின்றேம். கல் வெளிச்சத்தில் விழித்திருந்து ஓடியோடி வயிற்றுப் பிழைப்பிற்கு உழைத்து இன்பத்திற் திளைக்கின்றேம். இருள் சூழ்ந்ததும் அத்துணை உற்சாகத்தையும் இழந்து களைப்புற்றுச் சலிப்புத் தட்டிச் சோம்பலுடன் படுத்துறங்க ஆரம்பித்து விடுகின்றேம். இருளானது எமக்கு மரணத்தை ஒத்தது கொடுமை வாய்ந்தது இருளே நரகம். ஒளியே சுவர்க்கம். நரகத்தைப் பயங்ரமாக்கி நாம் அதனைக்கண்டு பயந்து வெருத்து ஒதுக்க வைப்பது இருளேயாகும். நரகத்தில் ஒளியே கிடையாது இருளடித்துக் கிடப்பதுதான் நரகம் இதனையே மிகவும் அழகாக வள்ளுவன் 'இருள் தேர்ந்த இன்னுவுலகம்' என்றும் 'ஆரிருள்' என்றும் கூறுகின்ருன்.

இருளும் ஒளியும் மாறிமாறி வரும் இவ்வுலகில் இருளைக் கண்டு அஞ்சாதார் இலர் குழந்தைகள் முதல் வயோதிபர் வரை அனைவரும் இருளை வெறுக்கின்றனர் செல்வராயினும் வறியவராயினும் ஒவ்வொருவரும் தத்தமது தகுதிகளுக்கேற்ப விளக்குகளை ஏற்றி இருளை ஓட்டுகின்றனர் இருளானது எமக்குப் பகையாகி கெடுதல் விளைவிக்கின்றதென் பதை எல்லோரும் உணர்கின்றனர் இதுவரை யாம் கண்ட இருளானது புறத்தே காணப்படும்பூத இருளாகும். ஆனல் எமது அகத்தே திணிந்துகிடக்கின்ற இருளை உணர்வாரோ இலர்

பலகோடி விளக்குகளை ஏற்றி இருளையும் பட்டப்பகலாக்கி விடலாம். இவ்விளக்குகள் யாவும் புறஇருளை அகற்ற உதவுமேயன்றி எமது அகத்தை ஆக்கிரமித்திருக்கும் அக இருளைப்போக்க உதவா. எமது மனதைமருட்டி மதியை மயக்கி அறிவைக்குலைத்து ஆன்மாவை அழுத்திக்கொண்டிருக்கும் ஆணவ மல இருளானது மிகமிகக் கெட்டது புற இருளானது புறபொருட்களை மறைத்தாலும் தன்னை மறைக்காது வெளியே காட்டும். ஆனல் எம்மனதைக் கவ்விக்கொண்டு மயக்கும் ஆணவ மல இருளானது தன்னையுங் காட்டாது. பொய்மை நிறைந்த இந்த ஆணவ இருளுக்கே நாம் அஞ்சவேண்டும். அதைக் கொன்றுகளைவதற்குத்தேவையான ஞான விளக்கையே யாம் தேடிப்பெற்று அடைய வேண்டும்

ஏனே மனிதன் இந்த அக இருளைப் பற்றிச் சிறிதளவேனும் நினைத்துப்பார்ப்பதில்லை. மனிதன் அஞ்சவேண்டியதற்கெல்லாம் அஞ்சாமல் அஞ்சவேண்டாததற்குஅஞ்சுசிறுவனை என எண்ணுந்தோறும் வியப்பே மேலிடுகிறது. மனிதனுடைய அகத்தில் குடிகொண்டிருக்கும் இருளானது அறியாமை என்னும் இருளாகும். 'தன்' என்ற ஒருவனது முனைப்பும் அதையொட்டிய அவனது செயற்பாடுகளும் அவனை முட்டாளாக்கி அவனினுள் இருக்கும் இருளையும் கூடும் இருளாக மாற்றிவிடுகிறது.

மனிதன் ஒவ்வொருவனினதும் அறியாமை ஆகிய இருள் மண்டி உறைந்து கிடக்கின்றது. நுண் அறிவாகிய (Intelligence) ஒளி எமது அகத்தினுள் நுழைய நுழைய அறியாமையாகிய இருட்படலம் சுருட்டியடித்துக்கொண்டு இருந்த இடம் தெரியாது ஓடி மறைகிறது அறிய அறியத்தான் எமது அறியாமை எத்தனை பெரிது என்பதை எம்மால் உணரக்கக்கூடியதாக உள்ளது. நுண்ணறிவு என்பது உண்மையை உள்ளவாறு அறிவதாகும்: ''மெய்ப்பொருள் காண்பதறிவு'' எனத் தமிழ் வேதம் கூறுவதும் இதையேயாம், அறியாமை என்பது உண்மையல்லாத பொய்மையையே குறிக்கும் அறியாமையானது பொய்மையாகிய இருளேயாகும். இப் பொய்மை இருளை நுண்ணறிவு என்னும் உண்மை விளக்கேற்றி ஓட்ட வேண்டியது மனிதராகிய யாம் கட்டாயம் செய்யவேண்டிய முதல் முக்கிய செயலாகுமன்ருே உண்மையை உள்ளி வாய்மையை வாயால் வழங்கி மெய்மையை மேவிச்செய்து நடப்பதற்கு பணம் வேண்டியதில்லை பணத்தை விரும்பியே உள்ளே ளியைத் தள்ளிப் பொய்மை இருளை அணைத்து புகவிடுத்து மாசுபடுத்துகின்றனர். பணத்தாலும் காண்டற்கரிய உயரிய புகழை உண்மை ஒரு நொடியில் அளித்துவிடும் பொய்யை உள்ளம் பாழ்பட்டுப் பதுங்கி உலையும். உண்மை ஒளியே மனதில் குடிகொண்டு இருக்கும். பொய் இருளைப் போக்கவல்லது, மனதை இருட்டிலே புகுத்திவிட்டுப்

(6-ம் பக்கம் பார்க்க)

கந்தையா நவரேந்திரன்


# விவசாயிகளே!

உங்கள் வயல்களில் நெல்லுடன் போட்டியிட்டு வளரும்

கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரை வாற்புல், ஆடிப்புல், பன்கோரை வகைகளை

சேர்கோப்பூர் 36% — 450 மி லி. ரூ. 69/- ; 3. லி. ரூ. 410/-

(புரொபனில் — 3, 4 டீ. பி. ஏ.)

பாவித்து சிறப்பாக கட்டுப்படுத்தி கூடிய விளைச்சலை உறுதி செய்துகொள்ளுங்கள்.

பாயர் இரசாயனம் விவசாயிகளின் பெருவிளைச்சலின் உறுதுணை.

BAYER

ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10.

இது ஒரு ஜேர்மன் தயாரிப்பு

[A 3023]



அன்பார்ந்தவாடிக்கையாளர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!

மகாவிஷ்ணு கையில் சங்கு!

உங்கள் கைகளில்

'சங்கு மார்க்'

எவர்சில்வர் பாத்திரங்கள்

தவழட்டும்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்

செல்லாசன்ஸ்

சேல்ஸ் சென்ரர்

இல. 118, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[கடைத் தெரு பிள்ளையார் கோவில் முன்பாக] [A2833]



எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

COMSAT COMMUNICATIONS

International Telephone Telex Service

உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி சேவை

கொம்சட் கொமினிகேஷன்

இல 791/1, பருத்தித்துறை வீதி, [மேல்மாடி கட்டடம்] (டாக்டர் G.குமரேந்திரன் மெடிக்கல் கிளினிக் அருகாமை) கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

இரவு பகல் 24 மணி நேர சேவை

மிக விரைவில் கோப்பாய் சந்தியில் எமது கிளை ஸ்தாபனம் ஆரம்பிக்கப்படும். [A2836]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மங்களம் பொங்கும் தீபாவளித் திருநாளில்
அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

எம்மிடம் சுத்தமான, தரமான தேங்காய் எண்ணெய் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**ஸ்ரீ கிருஷ்ணா இன்டஸ்றீஸ்**

7/8, கைத்தொழில் பேட்டை,
அச்சுவேலி. போன்: 226
(C-5508)

**யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்**

“வாடிக்கையாளர்கட்கு
எமது தீபாவளி வாழ்த்துக்கள்”

நினைவூட்டுகிறோம்:

எமது மணிக்கூட்டுக் கோபுர வீதி எரிபொருள் விற்பனவு நிலயம் மீண்டும் சேவையைத் தொடங்கியுள்ளது.

420 (530), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[A-2839]

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இதயங்கனிந்த

**தீபாவளி வாழ்த்துக்களை**

**சற்குணராஜா அன் பிறதர்ஸ்**
ஸ்தாபனத்தார்
பெருமகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்ளுகின்றனர்

தரமான கோழிக்குஞ்சுகளுக்கு
தலைநகரில் ஏற்பட்டிருக்கும் கடும் தட்டுப்பாட்டிற்கு
மத்தியிலும்
போக்குவரத்து சிரமங்களுக்கு மத்தியிலும்
இலாபத்தை மட்டும் நோக்கமாகக் கொள்ளாது
வாடிக்கையாளர்களுக்கு
இயன்றளவு சேவையை செய்யும்
**ஒரே ஸ்தாபனம்.**

660, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
பிரம்படி, கொக்குவில்.
[A 2831]

நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

எமது உள்ளங்கனிந்த

★ தீபாவளி நல் வாழ்த்துக்கள் ★

**“றேடியோ மனுவல்”**
121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

★ ஜெனரல் ரி.வி,
★ சம்சுங் ரி.வி யின்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்.

றேடியோ, ரெலிவிஷன்,
டெக், கசற்
மற்றும் உதிரிப்பாகங்கள்
விற்பனையாளர்களும், பழுதுபாப்பவர்களும்.
(இத்தொழிலில் மிகப்பழமையானவர்கள்)

**“RADIO MANUAL”**
121, STANLEY Rd, JAFFNA.
(C 5467)

## ஒளிவிளக்கு ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

புறத்தே ஒருவன் எத்துணை வெளிச்சத்தில் இருந்தாலும் என்னபயன்? ஒன்றுமேயில்லை. ஒருவனிடத்தே பணம், பதவி, பட்டம் மாடு, மனைகள், பூமிகள் ஆகிய விளக்கங்கள் எவ்வளவு இருந்தாலும் உண்மை விளக்கமும் அவனிடத்தே ஒளிபெறவேண்டும். பொய்யன் ஒருவன் இருளில் தொலைந்தவனே ஆவான். அவனது வாழ்க்கை விளக்கம் பெறாது. பொய்யினை எவரும் விரும்பார் ஏன்? பொய்யன் ஒருவன் தன்னைத்தானே வெறுப்பான். அவனுக்குப் புகழ் கிட்டாது. பழியே வந்து குவியும். பொய்யன் மனம் என்றுமே நிம்மதி கொள்ளாது. பொய்யொன்றை மறைக்க பொய்கள் பலவற்றைச் சொல்வான்.

புற இருளுக்கு அஞ்சி மருண்டுவிளக்கைத் தேடி ஓடுகின்றவர்கள் பொய்யாகிய இருளை உள்ளத்திலே ஊற்றி நிரப்பிக் கொண்டு திரிகின்றவர்களின் பேதமையை என்னவென்று சொல்வது? பொய்யென்பது ஒரு பொல்லா இருளென்பதை யாம் உணரவேண்டும். அவ்விருளை ஒழிப்பதற்கு உள்ளே முளைத்தெழும் நெஞ்சறி மெய் விளக்கை யாம் அணைத்துவிடக் கூடாது. அகத்தினிலே உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே முகத்தினிலே வாழ்க்கையிலே உண்மை ஒளி உண்டாகும் சூரியக்கதிர்களாலோ வேறுஎந்த விளக்குகளாலோ, ஒருவன் விளங்கப்போவதில்லை உண்மையெனும் ஒளியொன்றே மனிதனை விளங்கச் செய்து உய்விக்கும் அதுவே ஞானவிளக்கு. “எல்லா விளக்கும் விளக்கல்ல, சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு” என்றும் “பொய்யாமை யன்ன புகழில்லை” என்றும் தமிழ் மறை கூறுகிறது.

இனி, இருள் தோன்றி ஒளி மறைந்ததா, ஒளி வந்ததனால் இருள் அகன்றதாவெனப் பார்ப்போம். ஒளி நித்தியமானது. அது என்றும் நிலைத்துப் பிரகாசிக்கக் கூடியது. இருள் ஒளியை மறைக்கிறது. இருளானது நிலையானதன்று. நிலையற்ற உலகை-மாயையை இருள் குறிக்கிறது அறியாமை என்னும் இருள், எமது அகங்களில குடிபுகக் குடிபுகஅதனி

(7ம் பக்கம் பார்க்க)

**Modern Education Centre**
**Karaveddy.**
**உங்களுக்கு எங்கள்**
**தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**
(C5473) மாணவர் ஒன்றியம்.

எமது
தீபாவளி நல் வாழ்த்துக்கள்
**GLORIA TRAVELS**
★ கனடா ★ டென்மார்க்
★ பிரான்ஸ் ★ ஜெர்மனி
ஆகிய நாடுகளுக்கு
பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்
டென்மார்க், கனடா செல்வதற்கு
உடனடிப் பிரயாண ஒழுங்குகளும் செய்து தரப்படும்.
பாஸ்போட், பொண்ட், (BOND) விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.
**GLORIA TRAVELS,**
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.
[A-1391]

**ஜெனர்த்தன்ஸ்**
நிறுவனத்தார்

தமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
அபிமானிகள் அனைவருக்கும்
தமது உள்ளம் கனிந்த

★ தீபாவளி வாழ்த்துக்களை ★
தெரிவித்துக்கொள்கிறார்கள்

**JANARDEN'S INDUSTRIES**
**&**
**JANARDEN'S HARDWARE**
[A 2837]

வாடிக்கையாளர்களுக்கு எமது
உளம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

**நெஷனல் T. V.**
எங்கிருக்கிறது என அலைந்து
திரியவேண்டாம்

நாமே **நெஷனல்** தயாரிப்புகளின்
யாழ்நகர் பிரதான விற்பனைப்பிரதிநிதிகள்
**(KEY DEALER).**

2 வருட உத்தரவாதத்துடன் நெஷனல்
T.V.யை வாங்கவும், சிரமமின்றித்
திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்:

**V. K. இராசரத்தினம்**
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23447
(A-2825)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராண்டு
நினைவஞ்சலி



அமரர் பேருவளை
என். எஸ்.
பொன்னுத்துரை

நீங்கள் எம்மைப் பிரிந்து இறைவனடி சேர்ந்து ஈராண்டுகள் ஆகின்றன. இன்றும் நீங்கள் எமது இதயத்தில் அணையா ஜோதியாய் சுடர்பரப்பி நிற்கின்றீர்கள். அந்த ஒளியில் நாங்கள், நீங்கள் வகுத்த புனிதமான பாதையில் எமது பயணத்தை தொடர்கின்றோம். நல்லதோர் நாயகனாய், நல்லதோர் தந்தையாய், நல்லதோர் மாமனாய், பற்று மிக்க பாட்டனாராய் எல்லோர்க்கும் நல்லவனாய், வல்லவனாய், எல்லோரும் வாழ்த்த வாழ்ந்து விட்டு எல்லோரும் கண்ணீர் இறைக்க எம்மைவிட்டு பிரிந்து விட்டீர்கள். உங்கள் திங்கள்முகம் எம்மனதில் என்றும் தண்ணொளி வீசிநிற்கும். உங்கள் ஆத்மசாந்திக்கு கண்ணீர்புஷ்பங்களால் இறைவனை இறைஞ்சுகிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
No:7 சீனியர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை
(C-5519)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஒளிவிளக்கு . . .
(6-ம் பக்கத் தொடர்ச்சி)

னுள் உள்ள ஒளி என்னும் நுண் அறிவானது மறைகிறது. "இருள்" எமது அகங்களை முற்றாக ஆக்கிரமித்து, ஒளியானது தன் செயலற்று போய் விடுகிறது. ஒளி ஏற்கனவே உள்ளது. இருள் இடையில் வந்தது சூரியன் என்றும் உள்ளது. பூமியானது தன்னைத் தானே சுற்றி வருவதனாலேயே நாம் 12 மணிநேரம் இருளில் மூழ்குகின்றோம். ஆங்கிலத்தில் ",The Sun Sets' என்று கூறுகின்றோம். என்றாவது சூரியன் அஸ்தமிப்பது உண்டா? இல்லையே. பூமியானது தனதுபிற்புறத்தை சூரியனுக்குக் காட்டும் போது அதனது முற்புறம் இருட்டாகிறது. முற்புறத்தைச் சூரியனுக்குக் காட்டும் போது பிற்புறம் இருட்டாகிறது. இதனைத்தவிர சூரியன் அஸ்தமிப்பதில்லை அறியாமை அகல நுண்ணறிவு துலங்கும். இதனையே விவிலிய நூலில் வரும் வாக்கியம் குறிக்கிறது ' தட்டுங்கள் திறக்கப்படும்'' என்பது "அறியாமையென்னும் இருளைத்தட்டி நீக்கு,ஒளியாகிய நுண்ணறிவு தானாகத் திறந்து வெளிவரும்'' என்ற உண்மையை உணர்த்துகின்றது இஃதொரு பொது உண்மையாகும். சமயத்திற்கும் அப்பாற்பட்ட உண்மையிது. இந் நன்னாளில் அறியாமை என்னும் மாயையை - இருளை - நீக்கி நுண்ணறிவு என்னும் ஒளியைப் பெறுவோமாக.

இதுவே தீபாவளியின் உட்பொருளாகும்.

## ஞாபகார்த்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி
பிஷப் லக்ஷ்மன் விக்கிரமசிங்கா ஞாபகார்த்தக் கூட்டம் இன்று சனிக்கிழமை முதலாம் திகதி காலை 10 மணியளவில் யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெறும்.

வண பிதா போல் காஸ்பஸ், வண யோகான் தேவானந்த ஆகியோர் விசேஷ பேச்சாளர்களாகக் கலந்துகொள்வார்கள்.

## கடற்றொழிலாளர் உணவு முத்திரை

சுண்டுக்குளி, வெள்ளி
கடல் வலயத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான விசேட உணவு முத்திரைகள் கொழும்பிலிருந்து யாழ் சமூக சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த விசேட உணவு முத்திரைகள் செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்களிற்குரியவையென்றும் இவை முதல்யாழ்மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் இதனைப் பெறுவதற்கு தகுதியுடைய கடற்றொழிலாளர்கள்பெற்றுக் கொள்ளலாமெனவும் இதற்கு பொறுப்பான உத்தியோகத்தர் திரு. வி வி வரதராசா எமது நிருபரிடம் தெரிவித்துள்ளார். [ஊ]

வாடிக்கையாளர்கள்
வியாபாரிகள், நண்பர்கள்
கவனிக்க!

எமது புதிய விலாசம்

எமது வியாபாரத்தை விஸ்தரிக்கும் நோக்குடன் 1-11-86 முதல் புதிய விலாசத்தில் செயலாற்றுகின்றோம்.

இலக்கம் 19/3, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி மகளிர்கல்லூரி முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

ஜோ. எகட்டன்,
செனித் மார்கட்டிங் அன்ட்
அட்வடைசிங் சிஸ்டம்ஸ்,
யாழ்ப்பாணம்.
(A 3039)

லண்டனில். திருமணம்

மணமகன்:- செல்வன் ரமணபரமானந்தம்
மணமகள்:- செல்வி கௌரி இமானுவல்
(யாழ்.பல்கலைக்கழகம்)

இடம்:- விம்பிள்டன் பிள்ளையார் கோவில்,
லண்டன்

காலம்:- 2-11-86 (ஞாயிற்றுக்கிழமை)
நண்பர்கள், உறவினர்கள், நலன்விரும்பிகளுக்கு அறியத்தருகின்றோம்.

| திரு. திருமதி | திரு. திருமதி |
|---|---|
| S. பரமானந்தம், | B றெஜி இமானுவல், |
| 1, நெல்சன் பிளேஸ், | 10, மருதடி வீதி, |
| கொழும்பு-6. | யாழ்ப்பாணம். |

[C 5509]

விடியலுக்கில்லை தூரம்!

எமது
வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அன்பர்கள்
அனைவருக்கும் எமது தோழமையுள்ள
மங்களகரமான
தீபாவளி வாழ்த்துக்கள்

சண்முகம் றேட்ஸ்,
யாழ். நகர் பெரிய தெருவில்
[சின்னக்கடைச் சந்தி]

ஒரே கூரையின் கீழ்
எல்லாவிதமான பொருட்களைக் கொள்வனவு
செய்வதற்கு அமைந்திருக்கும் ஒரே ஸ்தாபனம்.
அது! இதுவென்று அங்குமிங்கும் அலையாமல்—
சகலவிதமான மளிகைப்பொருட்கள்— வெளிநாட்டு
உள்நாட்டு பால்மா வகைகள்— ஆடம்பர அன்பளிப்
புப்பொருட்கள்— மின்சார உபகரணங்கள்—
பாடசாலை உபகரணங்கள்— எழுதுகருவிகள்—
குழந்தைகள், பெண்மணிகளுக்கேற்ற லேஸ் வகைகள்—
பட்டன்ஸ் வகைகள்— நூல் வகைகள்—
குளிரூட்டப்பட்ட உணவுவகைகள் மருந்துவகைகள்—
உள்நாட்டு வெளிநாட்டு இறைச்சிக் கோழிகள்.
இதுமட்டுமா?

நீங்கள் இதுவென்று பெயரிடுங்கள். நாங்கள் அதைப் பெற்றுத் தருவோம். அத்துடன் தரமான தெளிவான மூலப்பிரதி போன்ற போட்டோஸ் பிரதிகள் பிரிண்ட் ஸ்டைல் (PRINT STYLE SYSTEM) முறையில் இரண்டு நிமிடங்களில் செய்து தரப்படுகின்றது.
விலை! தரம்!! தராதரம்!!!

இவை அனைத்திற்கும் நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்
"சண்முகம் றேட்ஸ்''

ஒருமுறை விஜயம் செய்தவர்களிடம் கேட்டால் தெரியும் எமது சேவை பற்றி. அது இது என்று அலட்டிக் கொள்ளாமல் நாம்தருவது உயர்வான நம்பகரமான துரித சேவை.

நவம்பர் மாதம் 1-ஆம் திகதி முதல் யாழ் சின்னக்கடை, பெரிய தெரு முதலிய இடங்களுக்கு தோல கட்டி தயாரிப்புகளின் மொத்த, சில்லறை வியாபாரிகளாக— செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் ஸ்தாபனத்தால் நியமிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். உங்கள் தேவைகளுக்கு எம்மைநாடுங்கள்.

சண்முகம் றேட்ஸ்,
இல: 185 (65), பெரிய தெரு.
(சின்னக்கடைச் சந்தி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22421

இலவச விநியோகம் வாசற்படியில்

விளம்பர வடிவமைப்பு:
ஜோ. எகட்டன்,
செனித் ADS, யாழ்ப்பாணம்.
[A3041]

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், வியாபாரிகள்,
நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது
மங்களகரமான
தீபாவளி வாழ்த்துக்கள்
தோழமையுடன் உரித்தாகுக!
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங் அன்ட்
அட்வடைசிங் சிஸ்டம்ஸ்,
19/3, கொழும்புத்துறை வீதி, [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை]
யாழ்ப்பாணம்.
(A 3040)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், போராளிகள் யாவருக்கும் எமது
AUM
LEELAA BAKE HOUSE
லீலா பேக் ஹவுஸ்
தீபாவளி வாழ்த்துக்கள்!
இந்நன்நாளில் லீலா பேக் ஹவுஸ் ஸ்தாபனத்தாரின்
பிஸ்கட்டுகளை சுவைத்து மகிழுங்கள்.
லீலா பிஸ்கட்டுகள் ஓர் தமிழ் ஈழத் தயாரிப்பு
கைதேர்ந்த தொழில் நுட்ப வல்லுனர்களால் மிகத்தரமாக தயாரிக்கப்பட்டவை.
MANUFACTURERS OF QUALITY BISCUITS
மார்க்கட் சதுக்கம், சங்கானை.
[எமது தயாரிப்புகளுக்கு நீங்கள்தரும் பேராதரவுக்கு நன்றி] (C-5527)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழக அனுமதிகள் (வெளிநிலை)
## கல்வியாண்டு (1987/88)

இலங்கைப் பல்கலைக்கழகங்களின்
பட்டப் பாடநெறிகளான
கலைமாணி (B. A)
விஞ்ஞானமாணி (B.Sc.)
சட்டமாணி (LL. B)
வணிகமாணி (B. Com)

க. பொ. த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தி
அல்லது
பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.
விபரத்தினையும், விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில்/தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பமுடிவு திகதி: 10.11-1986**
**விரிவுரைகள் 16-11-1986ல்**
**ஆரம்பமாகின்றன.**

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விரிவுரைகளை வழங்கும் ஒரேயொரு வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கான நிறுவனம்.

உதவிப்பதிவாளர்,
**பட்டப்படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[C-5509]

---

## கேள்விப் பத்திர அறிவித்தல்
## கச்சேரி - கிளிநொச்சி

[01] கிளிநொச்சி மாவட்ட கமநலச் சேவைத் திணைக்களத்தின் பரந்தனில் அமைக்கப்படவுள்ள கட்டிட வேலையை பொறுப்பேற்று செய்வதற்காக கேள்விப்பத்திரங்கள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரால் 12-11-86 பகல் 10-00 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

[02] கேள்விப்பத்திரங்கள் பளை கமநலச் சேவை நிலையத்தில் உள்ள கிளிநொச்சி மாவட்ட கமநலச் சேவை உதவி ஆணையாளரிடமிருந்து 12-11-86 காலை 9-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் ரூபா 500,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பெறுமதியான கட்டிடவேலைகள் பொறுப்பேற்றுச் செய்வதற்கு அரசாங்க திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு மட்டுமே வழங்கப்படும். முரசுமோட்டையில் அமைந்துள்ள கிளிநொச்சி கச்சேரியில் இருந்து ரூபா 50/-க்கான மீளப்பெறற்பாலற்ற கட்டுப்பணத்தையும் ரூபா 250/- மீளப்பெறக்கூடியதான வைப்புப் பணத்தையும் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுகளையும் சமர்ப்பிக்க வேண்டும். தபால்மூலம் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள், படிவங்கள் விநியோபதற்கான கடைசித் தினத்திற்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

[03] கட்டிட நிர்மாணவேலைகள் இரண்டு கட்டங்களில் நடைபெறும். 1-வது கட்டவேலைகள் 22-12-86 ற்கு முன் பூர்த்தியாக வேண்டும்.

[04] கேள்வியாளர்கள் கேள்விகளை பதிவுத்தபால் மூலம் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, கச்சேரி, கிளிநொச்சி முரசுமோட்டையில் உள்ள கச்சேரியில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக இடலாம்.

[05] கேள்விகள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மேலுறையின் இடதுபக்க மூலையில் "பரந்தனில் அமைக்கவுள்ள கமநலச்சேவைத் திணைக்கள மாவட்ட நிர்மாண வேலை" எனக் குறிப்பிட வேண்டும்.

[06] பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் தபாற்சேவை தாமதத்தையிட்டு குறிப்பிடப்பட்ட காலத்திற்குப் பிந்திக் கிடைப்பின், எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

[07] கேள்விகள் 12-11-86 பகல் 10-30 மணிக்கு திறக்கப்படும். கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாக இருக்கலாம்.

[08] மேலதிக விபரங்கள் தேவைப்படின் பளை கமநலச் சேவை நிலையத்திலுள்ள கிளிநொச்சி மாவட்ட கமநலச்சேவை உதவி ஆணையாளரிடமிருந்து காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜெகா செந்தில்நாதன்,
அரசாங்க அதிபரும்
மாவட்ட கேள்விச்சபைத் தலைவரும்,
கிளிநொச்சி மாவட்டம்.

கச்சேரி,
கிளிநொச்சி,
முரசுமோட்டை,
பரந்தன்.
29-10 86

[A 3036]

---

## 31-ம் நாள் அன்பு அஞ்சலி
*01-11-86*



**திருமதி**
**மரியரத்தினம்**
**குணரத்தினம்**
தோற்றம்: 30-05-1921
மறைவு: 02-10-1986

உயிருள்ளவரை நேசித்தவரை எம் உயிர்ப்புவரை நினைத்திருப்போம்.

எங்கள் ஆருத்துயரில் பலவிதத்திலும் பங்கு கொண்டு ஆறுதல் உறுதுணை நல்கிய அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகசகலபுனிதர்களையும் நினைவுகூரும் 01-11-1986ல் (இன்று) அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டும்படி பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

V. குணரத்தினம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
நவசோதி, சாவகச்சேரி.
(C 5502)

---

## நினைவஞ்சலி



**வே. சிறிஸ்காந்தா**
**B. A (CEY)**
(முகாமையாளர் வீரகேசரி யாழ் கிளை)
தோற்றம்- 17-07-1946
மறைவு: 07-10-1986

ஈழத்தமிழகத்தில் சுயமுயற்சி கொண்டவர்க்கு அளித்திட்டீரே உமது ஆதரவை, நாவலர் சிலை இடமாற்றத்தால் மனந்துவண்டீரே. பழைய இடத்திற்கே அவர் சிலை வரவேண்டும் என்று விரும்பினீரே. இலைமறைகாயாக நற்பணிகள் புரிந்தீரே. ஆனால் நற்பணிகள் தமிழ் மக்களிடையே துலங்கு முன்னரே மறைந்துவிட்டீரே. ஆம் நல்லவர்கள் மண்ணுலகில் வாழ்வதில்லை. அது உம் விடயத்திலும் உறுதி செய்யப்பட்டுவிட்டது, உமது பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், பெற்றோர் சகோதரர், உறவினர் நண்பர்கட்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

JMR Engineers,
3, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(C 5491)

---

## ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



**திருமதி**
**புஷ்பராணி**
**தியாகராசா**
[பாமா]
மண்ணுலகு: 13-06-1953
விண்ணுலகு: 11-11-1985
திதி: 01-11-1986

எங்கள் அன்புத் தெய்வமே உமையம்மையே எங்களுக்கு மகளாகப் பிறந்து தெய்வ பக்தியாலும் விரதத்தினாலும், சிறந்து. அறிவிற்சிறந்த பெரியோர்களது அன்பையும் ஆசியையும் பெற்று நாளொரு வண்ணமாக வளரும் வளர்ச்சி கண்டு மனம் பூரித்தோம். தீபாவளித் திருநாளில் அறந்திருந்த மின்சாரக் கம்பியினூற் தாக்குண்டு ஒரு நொடிப்பொழுதில் சிவபதம் சேர்ந்தீர். திருமணப்பதிவு பதிந்திருந்தும் மணவறை போகாமற் சுந்தரரைத் தடுத்தாட் கொண்டது போல் உம்மையும் எம்பெருமான் தடுத்தாட் கொண்டார் போலும், மகளே பாமா உங்களை இனிஎப்பிறப்பிற் காண்போம். உமது ஆத்மா சாந்தியடைய ஐந்தொழில்புரியும் எம் பெருமானைக் கண்ணீர்ப் பூச்சாத்தி சிரம் தாழ்த்தக் கை கூப்பிப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவாற்றுயருறும்:
அன்புக் கணவன், தாய்,
தந்தை. சகோதரர்,
மாமன், மாமி மைத்துனர்
மைத்துனிகள், மருமக்கள்,
பெருமக்கள்

"பாமா இல்லம்"
இறங்கணியவளவு
காங்கேசன்துறை
(C 5388)

---

## கைதாகி விடுதலை

[மட்டக்களப்பு நிருபர்]

மட்டக்களப்பு நகரிலுள்ள முஸ்லிம், தமிழ் வர்த்தகப் பிரமுகர்கள் நேற்று முன்தினம் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வர்த்தகர்கள் நீண்ட நேரவிசாரணையின் பின் பின்னர் விடுதலைப்பட்டுள்ளனர். [மா]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



முன்னாள் சாவகச்சேரி
கிராமசேவையாளர்

**அமரர்**
**தம்பிப்பிள்ளை**
**திருச்செல்வம்**

மலர்வு: 05 - 10 - 1934
உதிர்வு: 13 - 10 - 1985

பாசம், பக்தி பரிவு, பண்பு, பக்குவம், அணைப்பு, ஆதரவு, செயல்திறன், பெருமிதம் அனைத்தையும் எம்மில் சொரிந்து எமது வாழ்வே உங்கள் வாழ்வாகக் கொண்ட எமது தலைவர் பிரிந்து ஓராண்டாகி விட்டது. இந்தப் பாரினில் தங்களிடத்தை எவ்வகையிலும் ஈடுசெய்ய முடியாது வேதனையுறுகின்றோம் உங்களின் இனிமை நினைவுகளை இன்று நினைவுகூர்ந்து உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

மனைவி: தி. யோகேஸ்வரி, மகள்: தி தயாளவதனி, மகன், தி. யாழேந்திரன்.

'பௌர்ணமி'
தாமோதரம்பிள்ளைவீதி,
சாவகச்சேரி. [C-5498]

---

## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் நேரடியாக உடனுக்குடன் உங்களை அழைத்துச் செல்வார்.

**சவூதியில்:**

1. AIRLINE ACCOUNTANTS
2. SALES PROMOTOR
3 TICKET and RESERVATION AGENT.
4 TRAFFIC OFFICER

(With ACCOMODATION and OTHER BENEFITS)

கிளீனர்ஸ், Drivers மேசன், காப்பென்ரர், Gardener, Labourer (இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும்)

இவற்றுக்கான வருமான வாய்ப்புகள் உடனடியாக செய்து கொடுக்கப்படும்.

குவைத்: Labourer, கிளீனர்ஸ், Drivers (இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும்) இவற்றுக்கான வருமான வாய்ப்புகள் உடனடியாக செய்து கொடுக்கப்படும்.

எமது காரியாலயத்தில் பாஸ்போட் 10 படங்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும் இவை கைவசம் உடன் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

நன்றி

# GROUP ATLANTIC

(அடைக்கலமாதா கோவில் அருகாமையில்)
163, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (A 2838)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள HONDA C-90 (New Model Red) விற்பனைக்குண்டு. சுவையகம், அரச மதவடி, மாவிட்டபுரம், (C-5529)


## உதைபந்தாட்டம்: இறுதிப்போட்டிக்கு தெரிவு

யாழ்ப்பாணம்: ஞாயிறு யாழ் கல்வித்திணைக்களம் நடாத்திவரும் 13 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்து சுற்றுப்போட்டி அரை இறுதி ஆட்டத்தில் நாவாந்துறை கத்தோலிக்க வித்தியாலயம் கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாசாலையை 5—0 என்ற கோல்கணக்கில்வெற்றிபெற்று இறுதி ஆட்டத்தில் தெரிவானது.

யாழ் இந்துக்கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு ரி. சி குமாரன் நடுவராகக் கடமையாற்றினர். [சி]

## சிங்கள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றிபெற்று தமிழீழ நிர்மாணத்திற்குரிய செயற்திட்டங்கள் வகுக்கப்பட்டுவருகின்றன தமிழ் பிராந்தியங்களின் சிவில்நிர்வாகங்கள் படிப்படியாகக் கொண்டுவரப்படுகின்றன.

தமிழீழ நிர்வாக அமைப்பின்கீழேயே தமிழீழ பிராந்தியங்கள் நிர்வகிக்கப்படுவதால் சிறிலங்கா அரசின்எந்தவொரு நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் அல்லாமல் தமிழீழ நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழேயே தமிழீழ மக்கள் ஒவ்வொருவரையும் இயங்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

"இத்துடன் வர்த்தகர்கள் 31-12-86 ல் முடியும் காலாண்டிலிருந்து வியாபார மொத்த விற்பனவு வரியை தமிழீழச் செயலகத்தில் செலுத்தும்படியும் அறிவுறுத்துகிறோம் இதற்குரிய படிவங்கள் 31-12-86 ற்குள் சகல வர்த்தகர்களுக்கும் அனுப்பிவைக்கப்படும்" என்றும் அவ்வறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது. [மா]


இன்றைய இளைஞர்களுக்காக ★ விசேஷ தீபாவளி வெளியீடாக ★

உஷா மினியில்

'Commando Leopards' புகழ் Lewis Collins......IN

COBRA MISSION

இதுவரை நீங்கள் பார்த்திருக்கவே முடியாத அதிநவீன ஆயுதங்கள். கொண்ட தாக்குதல் படம்

தீபாவளி புதிய வெளியீடு

வெலிங்டன் திரையில்

10-30, 2-30, 6-30

சிவகுமார்-ராதிகா கவுண்டமணி கல்லாப்பெட்டி சிங்காரம் நடித்த

நிலவு சுடுவதில்லை (கலர்)

லிடோ

இன்று முதல்

10-30, 2-30 4-30, 6-30

HolCroft Convenant

(Full of Suspense and Action) (Color)


## புதிய போக்குடைய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

(எமக்குள் ஒருவரை மற்றவர் பலவீனப்படுத்த முயலாது) இணைந்து நின்று செயற்பட வேண்டுமென்பது கட்டாயமாகும்.'

ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) நேற்று விடுத்துள்ள அறிக்கையில் ஆவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது;

'இயக்கத்தைச் செயலிழக்கச் செய்வது யார்' என்ற தலைப்பிட்ட அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"வன்னிப் பிராந்தியத்தில் தம்மைச் சரணடையுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் வற்புறுத்தியதனால் தமது செயற்பாடுகள் அனைத்தையும் இடைநிறுத்திவிட்டதாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் அறிக்கைவிடுத்துள்ளது. எம்மைப் பொறுத்தவரையில் எந்தவொரு விடுதலை அமைப்பும் சகவிடுதலை அமைப்பைத் தடைசெய்யும் உரிமையை பெற்றிருக்க முடியாதென்பதே எமது நிலைப்பாடாகும்"

"விடுதலை அமைப்பானது போர்க்குணம் கொண்ட மக்கள் கூட்டத்துடன் வேலைத்திட்டங்களினூடாக தம்மை இணைத்துக் கொள்ளத் தவறும்போது செயலிழந்துபோகும் என்பதே வரலாறாகும்: இவ்வகையில் தானாக செயலிழந்துபோகும் தன்மையைநிராகரித்து செயற்கை முறையில் பலவந்தமாக செயலிழக்கச் செய்வதென்பது மக்களினதும் ஏனைய விடுதலை அமைப்புகளினதும் வன்மையான எதிர்ப்பைச் சம்பாதிக்கச்செய்வதோடு, ஈழப் போராட்டத்தையும் திசை திருப்பித் தாக்கிவிடும்.

'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் தங்களின் பலவீனங்களையும் தங்களுக்கு எதிரான சச்சுறுத்தலையும் மக்கள் முன்வைத்து விமர்சனம் செய்யாமல் தங்கள் செயற்பாட்டை இடைநிறுத்தம் செய்வதென மேற்கொண்ட தீர்மானமானது 'ஒரு இயக்கம் இன்னொரு இயக்கத்தின் செயற்பாடுகளைத் தடைசெய்யும் அதிகாரம் பெற்றுள்ளதென்பதை அங்கீகாரஞ் செய்வதாகவே அர்த்தப்படுகிறது இம்முடிவு போராட்டப்போக்கிற்கு முரணானதும் முற்றிலும் தவறானதும் ஆகும்" (மா)

## உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி மாணவர் பேரவையும், மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடாத்திவரும் உதைபந்தாட்ட 'நொக்சவுட்' போட்டியில், நேற்றுமுன்தினம் யாழ். மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெறவிருந்த உதைபந்தாட்டப் போட்டி திடீரென ஒத்திவைக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் காலை மத்திய கல்லூரியின் வகுப்பறையில் நின்ற செல்வன் பொன்னம்பலம் விபுலானந்தன், இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் மரணமானதை முன்னிட்டே மேற்படி போட்டி ஒத்திவைக்கப்பட்டது.

### இன்றைய ஆட்டங்கள்

மேற்படிக் குழுவினரால் இன்று மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடாத்தப்படும் இரு ஆட்டங்களின் விபரங்கள் வருமாறு:

முதல் ஆட்டத்தில், மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மோதும். 2-வது ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி மோதும். (வி)

## கோட்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வித தாக்குதலைக் கண்டித்து வைத்தியசாலை ஊழியர்கள் கோட்டையிலிருந்து இராணுவ முகாமை அகற்றுமாறு கோரி ஒரு ஆட்சேப நடவடிக்கையை ஆரம்பித்தனர். இந் நடவடிக்கை ஒக்டோபர் 14 வரை நீடித்தது.

இச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கும் மகஜரொன்று அனுப்பி வைக்கப்பட்டது: ஆனால் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

யாழ். குடாநாட்டிலுள்ள சகல அரசாங்க ஸ்தாபனங்களினது செயற்பாடுகளையும் முழுமையாக நிறுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்செய்தி தொடர்பாகப் பரிசீலனை செய்வதற்கு ஒக்டோபர் 29ல் கூடிய கூட்டணியின் அரசியல் குழு டாக்டர்கள், நோயாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் பலத்த எதிர்ப்பையும்பொருட்படுத்தாது இத்தாக்குதல் தொடர்ச்சியாக நடைபெறுவதாகச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது

இச்சம்பவம் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி சர்வதேச மன்னிப்பு ஸ்தாபனங்களுக்கு குறிப்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேச கமிட்டிக்கு அவதானிகள் குழுவொன்றை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்குமாறும் யாழ் கோட்டை இராணுவ முகாமை அகற்றும்படி கோருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச மன்னிப்பு ஸ்தாபனங்களுக்கு அனுப்பி வைத்த செய்தியில் கூட்டணி மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

யுத்த காலங்களிலும் வைத்தியசாலைகள் வைத்திய நிலையங்கள் ஒருபோதும் எதிரிப் படையால் தாக்கப்படுவதில்லை ஆனால் இலங்கை அரசாங்கத்தின் படைகள் வைத்தியசாலையினை நோக்கியே தாக்குதலை நடாத்துகின்றனர். எனவே இந்த கோட்டை இராணுவ முகாமை உடனடியாக அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். [கே]

## உயிரியலில் 4 ஏ பெற்றோர்

கொழும்பு வெள்ளி கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற க. பொ. த [உ. த] பரீட்சையில் அகில இலங்கையில் 7 மாணவர்கள் உயிரியல் பிரிவில் 4 'ஏ' பெற்றுள்ளனர்.

மூவர் றோயல் கல்லூரியிலிருந்தும், இருவர் ஆனந்தா கல்லூரியிலிருந்தும். யாழ். இந்துக் கல்லூரி, விசாகா வித்தியாலயம் ஆகிய பாடசாலையிலிருந்து தலா ஒவ்வொருவரும் 4 'ஏ' பெற்றுள்ளனர். [ஊ]


மிது வீடியோ மூவீஸ்சாரின்

தீபாவளி வாழ்த்துக்கள்

எமது தீபாவளி வெளியீடு

ரஜினிகாந், ராதிகா, அனித்தாருஜ் நடித்த

ASLINAQLI

அஸ்லி நக்லி

(ஹிந்தி)

மிது வீடியோ மூவிஸ்

பிரதான வீதி,

சித்தங்கேணி.

(C 2842)



# எம் டீ சோப்

## தீபாவளி போட்டி முடிவுகள்

| | பரிசு பெறுவோர் விபரம் | கடை விபரம் |
|---|---|---|
| 1. | M மங்கையற்கரசி, No 4, பென்டிகோஸ் லேன், கண்டி வீதி, யாழ்ப்பாணம். | — |
| 2. | N. நேசராணி, உதயதாரகை வீதி, சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. | ராணி ஸ்ரோஸ் சிறுப்பிட்டி. |
| 3. | திருமதி விஜயராஜசிங்கம் ஜீவமணி ஜீவபதி, நீதிமன்ற வீதி, மல்லாகம். | ஜீவா ஸ்ரோஸ் மல்லாகம். |
| 4. | த. தரணிகா, இலந்தைக்காடு, வல்வெட்டித்துறை. | சிவமணி ஸ்ரோஸ் இலந்தைக்காடு. |
| 5. | திருமதி ரெ ராஜராஜேஸ்வரி, 79, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். | யாழ். ப. நோ. கூ. சங்கம், கிளை இல. 12A (வீரமாகாளி அம்மன்) |
| 6. | வானதி மகேந்திரா, No. 6, வைமன் வீதி, யாழ்ப்பாணம். | — |
| 7. | கீதம் செல்வி, B 6, தொடர்மாடி, குருநகர், யாழ்ப்பாணம். | மணியம் ஸ்ரோஸ் தொடர்மாடி, குருநகர், யாழ்ப்பாணம். |
| 8. | செல்வி சந்திரமணி சுப்பிரமணியம் வைகுண்டம், தம்பசிட்டி வீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை. | கண்ணன்கடை தம்பசிட்டி வீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை. |
| 9. | சுப்பிரமணியம் தவமலர், கைதடி வடக்கு, கைதடி. | ஸ்ரீ சச்சிதானந்தா ஸ்ரோஸ் கைதடி மத்தி, கைதடி. |
| 10. | வேலுப்பிள்ளை குமாரசாமி (அதிபர்) வல்வை அ. மி. த. க. பாடசாலை, வல்வெட்டித்துறை. | உதயசிறீ ஏஜென்ஸி 18A, மெயின் வீதி, பருத்தித்துறை |

உங்கள் பரிசுப்பொருட்களை "எம். டீ என்ரபிறைஸ். தொழிற்பேட்டை அச்சுவேலி" என்ற முகவரியில் 3-11-86 க்கும் 7-11-86க்கும் இடைப்பட்ட நாட்களில் காலை 9 0மணிக்கும் மாலை 4 00 மணிக்கும் இடையில் பெற்றுக்கொள்ளலாம். பரிசு பெறவரும் பொழுது உங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள அடையாள அட்டையையும் கொண்டு வரவும்.

கடை உரிமையாளர்களின் பரிசுகள் அவர்களது கடையிலேயே வழங்கப்படும். பாவனையாளர்களும் கடை உரிமையாளர்களும் எங்களுக்கு கொடுக்கும் ஆதரவிற்குநன்றி செலுத்துவதுடன் எங்கள் தீபாவளி வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

எமது உற்பத்திகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு தரமான உள்ளூர் உற்பத்திகளுக்கு கொடுக்கும் ஆதரவாகும்.

(A 3044)



# சேவ்ரி ரவல்ஸ்

பிரயாணிகள், வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவர்க்கும்

எமது தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

எமது யாழ் - கொழும்பு பஸ் சேவை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

குழுவாக செல்லும் பிரயாணிகளுக்கு பிரயாண கட்டணத்தில் விசேட சலுகை உண்டு.

ஆசனங்கள் பதிவு செய்யுமிடம்:

(1) சேவ்ரி ரவல்ஸ் காரியாலயம்
102, 3ம் குறுக்கு வீதி, T. P. 22742

(2) ரட்ணம் பாமஸி அன் குறோஷறி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T. P. 22769

(3) சேகர் மோட்டேஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4) ஹோட்டல் ஞானம்ஸ்
299, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T. P. 22082

(2841)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
சனிக்கிழமை 1-11-86

## விபுலானந்தன் மரண விசாரணை:
# 'அம்மா அம்மா எனக்குளறியபடி துடி துடித்துக் கீழே விழுந்தார்'
## மாணவன் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி
"அம்மா, அம்மா என்று குளறியவாறு பின்னுக்குக் கையைப் பொத்திப்பிடித்த படி துடிதுடித்து விழுந்தவரை நானும், மற்றும் மாணவர்களும் ஓடிச்சென்று தூக்கினோம். அவர் உடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கு மரணமானார்.

"இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான யாழ். கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த யாழ். மத்திய கல்லூரி உயர் வகுப்பு மாணவர் பொ. விபுலானந்தன் (17 வயது) மரண விசாரணையில் நேற்று சாட்சியமளித்த மாணவன் பா. ரமணன் கூறினார்.

யாழ். டதில் நீதவான் ஏ. அன்ரனி முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

அவர் மேலும் கூறியதாவது: "காலை 8-45 மணிபோல் கல்லூரி மேல்மாடிக்கட்டட இரண்டாம்மாடிவகுப்பறையில் நாங்கள் இருந்தோம் முதல் வெடிச்சத்தம் கேட்டதும் கல்லூரி மாணவர் தலைவர்களில ஒருவரான இறந்த விபுலானந்தன், மாணவர்களை வகுப்பறையில் அமைதியாக இருக்குமாறு கூறிவிட்டு அவர் சுவர் அருகில் நின்றார். இரண்டு மூன்று துவக்கு சூட்டு சத்தம் தொடர்ச்சியாக கேட்டது. அவர் சூடுபட்டு கீழே விழுந்தார், நாங்கள் ஓடிச் சென்று அவரைத் தாங்கிப் பிடித்தோம். இரத்தம் பின்பக்கத்திலிருந்து வந்தது. வான் ஒன்றில் உடன் அவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். ஆசிரியர் ஒருவரும் மாணவரும் கூடச்சென்றனர்"

ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சையின்போது எடுக்கப்பட்ட துப்பாக்கிக் குண்டு ஒன்று மரண விசாரணையின்போது பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டது

இறந்தவரின் தந்தையே லுப்பிள்ளை பொன்னம்பலமும் சாட்சியமளித்தார். பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (இ)

## 40 பேர் மட்டும் விடுதலை

(மட்டக்களப்பு நிருபர்)
வாழைச்சேனைப் பகுதியில் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட 300 பேரில் 40 பேர் மட்டும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வாழைச்சேனை கண்ணன் கிராமத்தை சுற்றி வளைத்த அதிரடிப்படையினர் அக்கிராமத்திலுள்ள அனைத்து ஆண்களையும் கைது செய்தது தெரிந்ததே. (மா)

## சகல

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பகுதி மட்டும் தொடர்ந்து இயங்கும் அதேநேரம் அவசர சிகிச்சைக்காக மட்டும் நோயாளர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவார்கள்

ஆஸ்பத்திரியில் வழமையாக நடைபெறும் சத்திர சிகிச்சைகளும் கற்கை நெறிகளும் நிறுத்தப்படும். எனினும் அத்தியாவசியமான சத்திர சிகிச்சைகள் மட்டும் நடைபெறும்.

யாழ் கோட்டை இராணுவ முகாமினால் யாழ் ஆஸ்பத்திரிக்கு ஏற்பட்டுள்ள சங்கடமான நிலையை நேரில் பரிசீலிக்க அடுத்த வாரமளவில் கொழும்பிலிருந்து அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் செயலாளர் ஆகியோரும் வரவிருக்கின்றனர் என்றும் இக்குழு தெரிவித்துள்ளது. (வா)

## க.பொ.த--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இதற்கான சகல சுற்றறிக்கைகளும் பிராந்தியக் கல்வி அதிகாரிகள் மூலம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுமென கூறபடடுகிறது. (சி)

## அஞ்சலியும் ஊர்வலமும்

யாழ்ப்பாணம், சனி
இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு நேற்றுமுன்தினம் பலியான யாழ். மத்திய கல்லூரி மாணவன் பொ. விபுலாநந்தனின் பூதவுடலுக்கு நேற்றுபிறபகல் 3 மணிவரை அவரது இல்லத்தில் வைத்து பெருந்திரளான மாணவர்கள் ஆசிரியர்கள் பொதுமக்கள் மலர்வளையம் சாத்தி தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

யாழ் அரசாங்கஅதிபர் திரு. எம் பஞ்சலிங்கம், யாழ். கல்விப்பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் மத்திய கல்லூரி அதிபர் திரு. வே. பாலசுந்தரம் மற்றும் யாழ். மாவட்ட கல்லூரிகளினதும் பாடசாலைகளினதும் அதிபர்கள் ஆசிரியர்களும் தமது இறுதி அஞ்சலியைச்செலுத்தினர்.

யாழ் போதனா வைத்திய சாலை நலன்புரிச் சங்கமும் இதில் கலந்துகொண்டது.

இறுதி அஞ்சலியைத் தொடர்ந்துகல்லூரிக் கீதம் இசைக்க பெற்றோர் உறவினர் கதறி அழ விபுலானந்தனின் பூதவுடலைத் தாங்கிய பேழையை மத்திய கல்லூரி ஆசிரியர்களும் உறவினர்களும் அவரது வீட்டுக் 'கேற்' வரை தாங்கி வந்தனர்.

வீட்டுக்கேற்றிலிருந்து கஸ்தூரியார் வீதி கன்னாதிட்டிச் சந்திவரை மாணவ தலைவர்கள் விபுலானந்தனின் பூதவுடலைத் தாங்கிய பேழையைத் தாங்கி வந்தனர். கன்னாதிட்டிச் சந்தியில் இருந்து பிரேதவண்டியில் பூதவுடலைத் தாங்கிய பேழையின்மீது மத்திய கல்லூரிக் கொடி போடப்பட்டிருந்தது. சாரணச் சிறுவர்கள் பிரேத வண்டியைச்சுற்றி அணிவகுத்துச்செல்ல அதற்கு முன்னால் மலர் வளையங்கள் சகிதம் மாணவ தலைவர்கள் அணி வகுத்துச்செல்ல பிரேத ஊர்வலம் கஸ்தூரியார் வீதி நாவலர் வீதி காங்கேசன்துறை வீதி ஐயனார்கோவில் வீது மானிப்பாய்வீதி வழியாகச் சென்று கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (வா)

## முறிகண்டி--:.

1-ம் பக்கத் தொடர்ச்சி)
மிடையில் பிரச்னைகள் ஏற்படலாமென்பதால் உங்களுக்குப் பாதுகாப்பளிக்கும் நோக்கமாகவே தடுத்து நிறுத்தினோம்" என்று கொக்காவில் முகாம் இராணுவத்தினர் தெரிவித்ததாக பிரயாணிகள் தெரிவித்தவர்,

தாங்கள் முறிகண்டி ஊடாக கிளிநொச்சி நோக்கி வந்து கொண்டிருந்தபோது முறிகண்டிப் பிள்ளையார் கோவில் ஐயரின் வீடு. கார் கோவில் முன்னுலுள்ள கடைகள் மோட்டார் சைக்கிள்கள் எரிந்துகொண்டிருந்ததைத் தாங்கள் கண்டதாகவும் பிரயாணிகள் தெரிவித்தனர்.

எரிந்து கொண்டிருந்த கடைகள் திறந்திருந்ததாகவும் அங்கு பொதுமக்கள் நடமாட்டத்தைக் காணவில்லையென்றும் அவர்கள் சொன்னார்கள்.

கிளிநொச்சி இராணுவமுகாமுக்குள் இராணுவத்தினர் சென்றதும், தாங்கள் எதுவித பாதிப்புமின்றி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்களாம். (மா)

## லொறி கடத்தப்பட்டு பொருட்கள் கொள்ளை

யாழ்ப்பாணம், சனி
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குபால்மாவகைகள் மற்றும் உணவுப் பொருட்களுடன்வந்தலொறியொன்று மீரிகமவில் ஆயுதக்கோஷ்டியினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

லொறியை வழிமறித்துக் கடத்திச் சென்ற ஆயுதக் கோஷ்டியினர், காட்டுக்குள் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை இறக்கிவிட்டு லொறியை செல்ல அனுமதித்ததாக கூறப்படுகிறது.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மீரிகம பொலிஸில் புகார் செய்யப்பட்டதை தொடர்ந்து லொறி பொலிஸின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி யாழ் வர்த்தக சங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அரிசி, மா, சீனிக்கு தட்டுப்பாடு ஏற்படாது

யாழ்ப்பாணம், சனி
யாழ், குடாநாட்டில் அரிசி, மா, சீனிக்கு எந்தவித தட்டுப்பாடும் ஏற்படாதென உணவுக் கட்டுப்பாட்டு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது காங்கேசன்துறை துறைமுகத்தில் 1000 மெற்றிக் தொன் புச்சை அரிசி ஏற்றிக் கொண்டுவந்த கப்பலிலிருந்து இன்று இறக்கும் வேலைகள் நடைபெறவுள்ளது அத்துடன் 'மேர்க்கஸ் கொழும்பு' என்னும் கப்பல் 3000மெற்றிக் தொன் கோதுமை மாவுடன் நேற்று காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்துள்ளது

மேலும் 'மேர்க்கஸ் மாத்தறை' என்னும் கப்பல் 950 மெற்றிக் தொன் சீனி ஏற்றிக் கொண்டு நாளைஅல்லது நாளை மறுதினம் காங்கேசன்துறை முகம் வரவுள்ளதெனவும் அவர் சொன்னார் [வா]

### பஸ்ஸுக்கு கல்வீச்சு

யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று முன்தினம் கொழும்பு சென்ற தனியார் பஸ் ஒன்று மதவாச்சியில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதைத் தொடர்ந்து பஸ் கல்வீச்சுக்குள்ளானது. பிரயாணிகள் சில மணிநேரம் தாமதித்தபின் தொடர்ந்து பயணம் செய்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்றவர் காயத்திற்குள்ளானதாக இச்சம்பவம் பற்றிக்கூறப்படுகிறது. (இ)

## பொறியியல்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
திகதி செவ்வாய்கிழமை ஆரம்பமானது.

அன்று காலை மாணவர்கள் பல்கலைக்கழக உபவேந்தர் அலுவலகம் சென்று அசம்பவிதங்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 21 மாணவர்களையும் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதனால் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட அமளி துமளியைத் தொடர்ந்து பொறியியல் பீடம் மீண்டும் மூடப்பட்டதுடன் சகல பரீட்சைகளும் காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (சி)

## துபபாக்கி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுக்கு இப்பெண் பலியானார்.

யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கடைக்கப்பட்ட இந்த பெண்ணின் சடலம் இது வரை அடையாளம் காணப்படவில்லை. [மா]

## மரண அறிவித்தல்

### சின்னம்மா வீரசிங்கம்

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னம்மா வீரசிங்கம் அவர்கள் காலமானார்கள். இவர் சுப்பையா வீரசிங்கத்தின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரது பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து புங்குடுதீவு மணற்காடு மயானத்திற்கு 2-11-86 ஞாயிற்றுக் கிழமை பகல் 12 மணியளவில் ஈமைக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: செ. லோகேந்திரன். (A3043)


## மரண அறிவித்தல்

### வன்னித்தம்பி சின்னத்தம்பு

மாவிட்டபுரம் 10ம் கட்டை ஒழுங்கையைச் சேர்ந்த வன்னித்தம்பி சின்னத்தம்பு காலமாகிவிட்டார், இவர் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜேந்திரன் (சிறி) சவுதி அரேபியா, இராஜலட்சுமி, இராஜகுமார், (வாசன்) யாழ். பல்கலைக்கழகம் நாகேந்திரன் (கண்ணன்), இரவிக்குமார், இராஜரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் மாவிட்டபுரத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக மாவிட்டபுரம் மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (C5541]

### டாக்டர் நா. ராஜகுலசிங்கம்



டாக்டர் நா. ராஜாகுலசிங்கம் சவூதியில் 13-09-86-ல் காலமானார் இவர் திரு. திருமதி நாகமணி தம்பதிகளின் அன்பு மகனும், சிவராஜகுலசிங்கம் (மின்சாரசபை சுன்னாகம்), ஜெயபாலசிங்கம் (டென்மார்க்), றஜனி (ஆசிரியை உவர்மலை மகா வித்தியாலயம் திருகோணமலை), பவானி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயதேவியின் மைத்துனரும், மதனின் சித்தப்பாவும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 01-11-1986) சனிக்கிழமை மாலை 3 மணியளவில் கரவெட்டியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்: திரு. திருமதி நாகமணி, பவுண்டரி லேன், நெல்லியடி, கரவெட்டி. C 5539

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P.O. Box 49, Telegram Eelanadu Telephone: 22389 - 24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org